உ
கணபதி துணை

காஞ்சீபுரம் மகாவித்துவான்

சபாபதி முதலியார் இயற்றிய

திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா

MAHAMAHOPADHYAYA DR. V SWAMINATHA AIYAR LIBRARY

இது
சென்னை
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் - உ. வே. சாமிநாதையரால்
பரிசோதிக்கப்பெற்று
நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை
லிபர்ட்டி அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

[இரண்டாம் பதிப்பு]

பிரமாதி௵ ஆடி௴

1939

Copyright Registered

[விலை அணா 4

உ

கணபதி துணை

முகவுரை

திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

பூணொ ணாததொ ரன்பு பூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாண மெய்தி நடுக்க டலுள ழுந்திநான்
பேணொ ணாத பெருந்து றைப்பெருந் தோணி பற்றி யுகைத்தலும்
காணொ ணாத்திருக் கோலநீ வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

திருச்சிற்றம்பலம்

தமிழ்ப் பிரபந்தங்களுள் வெண்பாவாலமைந்த நூல்கள் பல. பாட்டுடைத் தலைவருடைய நாடு முதலிய பத்து அங்கங்களைச் சிறப்பித்து வெண்பாவாற் பாடப்படுவனவாகத் தசாங்கம், சின்னப்பூ என்னும் இரண்டு பிரபந்தங்கள் உண்டு. அவ்வங்கங்களுள் ஏதேனும் ஒன்றனைத் தனியே சிறப்பித்து நூறு வெண்பாக்களாற் பாடுவதும் மரபு. அவை அவ்வப்பெயராலேயே வழங்கும். ஊரைச் சிறப்பித்துப் பாடுவது ஊர்வெண்பா எனப்படும். தலைவர்களுடைய ஊர்களைச் சிறப்பித்துப் பாடப்பெற்ற பழைய தனிச் செய்யுட்கள் பல உண்டு. கலம்பகத்திற்கு உறுப்பாகவும் அத்தகைய செய்யுள் வரும்.

பிற்காலத்தில் தலங்களைச் சிறப்பித்துப் பாடிய வித்துவான்கள் பலர் தாம் நூல் செய்யப் புகும் தலத்தின் பெயரை இரண்டாமடி மூன்றாஞ்சீரில் வைத்து முன் இரண்டடிகளிற் சிலேடையையும் பின்னிரண்டடிகளில் திரிபையேனும் மடக்கையேனும் அமைத்து இயற்றிய பிரபந்தங்கள் பல. அவை ஊர் வெண்பாக்களேயாம். முதல் ஐம்பது பாடல்கள் சிலேடையின்றியும் பின் ஐம்பது சிலேடையுடனும் அமைந்துள்ள நூல்கள் சில. இவ்வகையிற் பின்னும் வேறுபாடுள்ள நூல்கள் பல உண்டு.

திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா என்பது காஞ்சீபுரம் மஹாவித்துவான் சபாபதி முதலியார் திருக்கழுக்குன்றத்தைச் சிறப்பித்துப் பாடிய பிரபந்தமாகும்.

திருக்கழுக்குன்றமென்பது தொண்டைநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டனுள் ஒன்று. சைவ சமயாசாரியர்கள் நால்வராலும் பாடப்பெற்ற திருப்பதிகங்களை உடையது. அந்தகக்கவி வீரராகவமுதலியாரென்னும் கவிஞர் கோமானால் தமிழ்க் காப்பிய இலக்கண மமைந்து சொற்சுவை பொருட்சுவை மலிந்து விளங்கும்படி இயற்றப்பெற்ற புராணமும், அவராலும் பிறகவிஞர்களாலும் இயற்றப்பெற்ற சில பிரபந்தங்களும் இத் தலவிஷயமாக உள்ளன. பல புலவர்களாற் பல சமயங்களிற் பாடப்பெற்ற தனிப்பாடல்களும் பல உண்டு. இந்தத் தலத்தின் பெருமை மகாபுராணங்களிலும் பிற தலபுராணங்கள் பலவற்றிலும் வேறு பல நூல்களிலும் இடையிடையே காணப்படும்.

இன்றும் இத்தலம் சம்பு ஆதி என்னும் பெயருடைய முனிவரிருவர் கழுகு வடிவமாக நாடோறும் வந்து தரிசித்துப் பிரசாதம் உண்டு தெய்வ நம்பிக்கையற்றவர்கட்கும் தெய்வபக்தியை உண்டாக்கும் அருமைத் திருக்காட்சியினால் உலகமெல்லாம் புகழப் பெறுவதும், அந்த மகிமையினால் பட்சிதீர்த்தம் என்று வழங்கப் பெறுவதும், பிரபல யாத்திரை ஸ்தலங்களுள் ஒன்றாக விளங்குவதும், கிரிப்பிர தட்சிணம் செய்வதனால் தீராப் பிணிகளெல்லாம் தீரச்செய்யும் அற்புதம் வாய்ந்திருப்பதும் யாவரும் அறிந்தனவே. இத்தலத்தில் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் குருதரிசனம் காட்டியருளினார். நந்திதேவர், இந்திரன் முதலியோர் இங்கே வழிபட்டுப் பேறுபெற்றனர். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகர் திருநாமம் வண்டுவனப் பிள்ளையாரென்பது. சிவபெருமான் திருநாமம் வேதகிரீசர் என்பது. அம்பிகையின் திருநாமம் பெண்ணினல்லா ளென்பது. நான்கு வேதங்களும் நான்கு மலை வடிவமாக இருத்தலால் இத்தலம் வேதகிரியெனவும் வழங்கப் பெறும். இங்ஙனம் ஒவ்வொரு காரணத்தால் இதற்கமைந்த நாமங்கள் பல. இங்கே சங்கதீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உண்டு.

இத்தலத்தைப்பற்றிய விரிவான வரலாறுகளைத் திருக்கழுக்குன்றத்துலா முகவுரையிற் காணலாம்.

இந்நூல் திருக்கழுக்குன்றத்து வெண்பாமாலை (காப்பு), கழுக்குனறமாலை யெனவும் வழங்கும்.

காப்புச் செய்யுட்கள் இரண்டும் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் முன்பு அமையப் பின் சிலேடையின்றி ஐம்பது செய்யுட்களும் அவற்றின்பின் சிலேடையாக ஐம்பதும் இதில் உள்ளன. 51, 53 முதல் 89-ஆம் செய்யுட்களில் இருபொருட் சிலேடையும், 52, 90 முதல் 95-ஆம் செய்யுட்களில் முப்பொருட் சிலேடையும், 96 முதல் 100-ஆம் செய்யுட்களில் நாற்பொருட் சிலேடையும் அமைந்துள்ளன. செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என்னும் இரண்டு வகையும் இதில் விரவிவந்துள்ளன. பின் அடியிரண்டும் மடக்காக உள்ள செய்யுட்கள்: 17, 19. முன் அடியிரண்டும் பின் அடியிரண்டும் மடக்காக உள்ளவை: 45—9. ஏனையவை பின்னிரண்டடிகளும் திரிபாக உள்ளவை.

இந்நூலின் ஆசிரியரான கா. சபாபதி முதலியார் காஞ்சீபுரத்திற் பிறந்தவர். அந்த ஊரிலிருந்த தமிழ் வித்துவான்களிடத்திலும் பின் திருவாரூர் சென்று அங்கேயிருந்த சைவப் பெரியாரொருவரிடத்தும் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையே அவர் கற்றார். அப்பால் சென்னையிலும் சில வித்துவான்களிடத்திற் பாடங்கேட்டனர். சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தமிழாசிரியராகப் பலவருடங்கள் இருந்து வந்தனர். பல சைவ நூல்களையும் பிரபந்தங்களையும் பதிப்பித்தனர். சில நூல்களுக்கு உரையெழுதினர். பல பிரபந்தங்களும் சில ஸ்தல புராணங்களும் இயற்றினர். பலர் வேண்டுகோளின்படி வாரந்தோறும் ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயிலிற் சைவப் பிரசங்கம் செய்துவந்தனர். சென்ற நூற்றாண்டில் சென்னையில் தமிழ் நூல்களைப் பலருக்கும் முறையே பாடஞ் சொல்லித் தமிழறிவைப் பரப்பிய பெரியார்களுள் அவரும் ஒருவர். அவரிடம் பாடங்கேட்ட மாணவர்கள் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய பலர். என்னுடைய ஆசிரியராகிய திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்குப் பாடஞ் சொன்னவர்களுள் அவரும் ஒருவர். அவரிடத்தில் பிரபுக்கள் பலர் நன்மதிப்பு வைத்து அவரை ஆதரித்து வந்தனர்.

இந்நூலால் அறிந்த விசேஷச் செய்திகள்

1. சிவசின்னங்கள் முதலியன: அக்கம், 4, 40; அஞ்செழுத்து, 3, 35; திருநீறு, 3, 4, 40, 60; மறைச்சைவநெறி, 3; வில்வம், 16, 79.

2. சிவபெருமான் அங்கங்கள்: ஆறுமுகம், 73; இடபக் கொடி, 91; இருசுடர்க்கண், 69; ஐராவணம், 9; கச்சணிந்த அரை, 78; கொங்கைத் தழும்பு, 95; கொன்றை மாலை, 68; சூலப்படை, 42, 72; தமருகக்கை, 45; தலையோடு, 88, 93; திருமால் விடை, 6, 94; நெற்றிக்கண், 46, 72, 91; பஞ்ச முகம், 15; பாசுபதம், 34; பிநாகவில், 92; பூதப்படை, 55, 57; மறைப்பரி, 14; மேருமலைவில், 66.

3. சிவபெருமான் அருட்செயல்கள்: அற்பொழுதில் ஆடியது, 60; ஆனைந்துமாடுதல், 71; இருபத்தெட்டாகமங்களை அருளிச்செய்தது, 23, 60; உமைக்குப் பாகம் அளித்தது, 47, 76, 82, 87; கங்கையை ஏற்றருளியது, 39; காளிக்குத் தோல்வியுற நடஞ் செய்தது, 94; திருமால் கண்ணுலருச்சித்தது, 27, 82; பிரமனையும் திருமாலையும் இரண்டு பக்கத்தில் பெற்றிருத்தல், 31; புலிக்குட்டிக்குப் பாலாழி யளித்தது, 70; மதி, அரவு, கங்கை இவற்றைத் தாங்கியது, 19; வேடவுருவம் பூண்டது, 12, 23.

4. சிவபெருமான் பராக்கிரமக் குறிப்புக்கள்: ஆமையோட்டை அணிந்தது, 21; ஆலமுண்டது, 8, 10, 48, 98; இராவணன் தோள்களைத் துவைத்தது, 7; காலசங்காரம், 3; சூரியன் பல்லைத் தகர்த்தது, 89; தக்கயாகசங்காரம், 23; புவித்தேரூர்ந்தது, 87; மதியினைத் தேய்த்தது, 83; மானை ஏந்தியது, 52; முப்புரத்தை எரித்தது, 2, 86; யானையை உரித்தது, 57, 67, 84, 86, 93.

5. சிவபெருமான் பெருமை: அன்னத்தா லறியப்படாதவர், 25; சந்திரசேகரர், 63; சமயத் தலைவர், 30; சாமவேதத்தினன், 43; திருமால் பன்றிவடிவங்கொண்டு தேடியது, 27; நீலகண்டர், 63; மயானத்தில் ஆடுபவர், 63; மலைக்கு மருகன், 18.

6. தல வரலாறுகள்: இந்திரன் பூசித்தது, 37; கதிரவர் போற்றியது, 47; கழுகு தொழல், 29, 49; கோடி உருத்திரர்கள் பூசித்தது, 34; சம்பாதி கழுகாகிப் பூசித்தல், 43; திருமால் பூசித்தது, 38; நந்தி கருடனைச் சீறியது, 32; நந்தி தவம் செய்தது, 35; பன்றியும் பசுவும் முன்னையுருப்பெற்றது, 44; பிரமதேவர் பூசித்தது, 39; மாணிக்கவாசகர் குருவடிவம் கண்டது, 20; மார்க்கண்டர் மாயிகனைச் சபித்தது, 36; முனிவர் பாணி

ளியப் பொருள் தெரிந்தது, 42; மூவர் பாடியது, 15; வசுக்கள் பூசித்தது, 40; வண்டுவனப் பிள்ளையார் காப்பு, 1; வேதம் மலையானது, 33.

7. மதுரைத் திருவிளையாடல்கள்: கல்லானைக்குக் கரும் பருத்தியது, 47; குண்டோதரற்கு அன்னக்குழி அளித்தது, 81; சுந்தரப்பேரம்பெய்தது, 39; தருமிக்குப் பொற்கிழி அளித்தது, 38; நரியைக் குதிரையாக்கியது, 92; நான்கு வேதங்களையும் அருளிச் செய்தது, 81; மண் சுமந்தது, 4, 37.

8. நாயன்மாரும் பிறரும்: அப்பர், 15, 48; இளையான்குடி மாறர், 65; ஏனாதிநாதர், 61; ஐயடிகள், 89; கலிக்கம்பர், 17; சாக்கிய நாயனார், 96; சிறுத்தொண்டர், 13; சுந்தரமூர்த்தி நாயனார், 54, 75; சேக்கிழார், 1, 30; சேரமான்பெருமாள், 59, 64; சோமாசிமாறர், 58; திருஞானசம்பந்தர், 15, 26, 49; திருநீலகண்டயாழ்ப்பாணர், 29, 100; பூசலார், 28; மூவர், 62; வாயிலார், 51.

9. பிற தலங்கள்: ஆலவாய், 24, 37, 38, 47, 49, 77, 81, 92; கடவூர், 6; கல்லாலடி (திருக்காளத்தி), 96; குருக்கேத்திரம், 42; சிராப்பள்ளி, 36; தஞ்சாக்கை, 11; தலையாலங்காடு, 8; திருத்தலையூர், 32; திருவக்கரை, 62; திருவிற்கோலம், 41; நாகைக்காரோணம், 98; நெல்லை, 97; பருப்பதம், 83; பாசூர், 27; புன்கூர், 85; பொதியமலை, 44; மறைக்காடு, 27; மாவடி (காஞ்சி) 56, 95, 99; வெள்ளிமலை, 3, 80.

பல வருடங்களுக்கு முன்பு இந்நூல் எழுதிய ஏட்டுச்சுவடியொன்று திரிசிரபுரம் வித்துவான் சி. தியாகராஜ செட்டியாரிடத்திலிருந்து கிடைத்தது. தம்முடைய ஆசிரியருக்குப் பாடஞ் சொன்னவர் இயற்றிய நூலென்ற அன்பினால் அவர் இதனைத் தாமே எழுதிவைத்திருந்தார். சுருக்கமான குறிப்புரையுடன் இந்நூல் முதன்முறையாக ஸ்ரீமுக வருஷம் பலவான்குடி ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்களுடைய பேருதவியால் சிவநேசன் பத்திரிகை வாயிலாக வெளியிடப் பெற்றது.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
16—7—'39

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண்–பக்க எண்]

அடியவர் போல்	2	செங்கைமழுவோன்	19	பூவைசமயத்	11
அண்டர் தொழுங்	5	செச்சைமுலை	24	பெட்கும் பொழின்	31
அண்ணன் மொழி	12	செந்திருவனூர்	21	பொற்பின்மட	20
அம்பரத்திற்	2	செப்புமன்னர்	28	பொன்ருழ்	27
அரனையவ	11	செம்பவள	23	பொன்னனையார்	22
அனமருவு	30	செவ்விமயில்	18	மதிதவழு	7
ஆதியந்தமாக	17	சேந்தனடியர்	22	மருவுபொழின்	30
ஆம்பன்முகி	8	சேரும் பிதிர்	19	மருவுமொரு	12
இமிர்செம்	6	சேல்வெகுண்டு	5	மன்னுபுகழ்	26
உட்டுறவோர்	21	சேலோடு	23	மாணிக்கப்	4
உய்வானோர்	12	சொற்பெரிய	29	மாதர்நடங்	6
உள்ளும்பரத்தை	17	தாமரையம்	8	மாதர்மலர்விழி	20
எண்ணும் பிருகு	13	தாரிலகு	22	மாந்தளிர்க்கை	5
எண்மாவசுக்க	14	தாவிலிளனூர்	18	மீண்டுமெயினர்	11
ஏந்திழையார்	6	தானமிகு	26	மித்தையகல்	22
ஒப்பின்மன்னர்	24	திக்கயநே	26	முனிவர்கணம்	14
கட்டங்கள்	15	திங்கடவழ்	2	யாணர்மிகு	25
கண்ணரனூர்	9	திருக்கழுக்குன்றத்து	1	வண்டுமொய்த்த	2
கழுகுநடு	17	துன்னுபன்றி	15	வளத்தில்லிறத்தோர்	29
காட்டத்தெரியுங்	16	துன்னுமணஞ்	28	வாட்டமிலன்	24
காமிகவாக்குக்	16	தொண்டர்மடங்	32	வாட்டமின்மார்க்	12
குலவுமந்த	7	தொண்டின்மிகு	7	வாய்ந்தகழை	4
குன்மம்	4	நம்புகழைக்	23	வாழ்கவர	1
கைப்புகநல்கால்	16	நல்லார்குடை	20	வானதிதோ	8
கொன்றைமரத்	3	நற்குலத்து	27	வானூர்மலைச்	25
சங்கரனூர்	15	நிருத்தன்மகிழ்ந்து	10	விஞ்சிய	14
சந்தக்கடம்பாவி	32	நேருமொரு	13	விஞ்சுகயலினங்	19
சந்தமிகுங்	3	பஞ்சினடியார்	20	விண்டுபிரமன்	10
சந்தமிகுந்	9	பரந்திழியு	28	விண்டொடர்	4
சாலச்சிவகதை	28	பிள்ளைமதி	3	விண்ணூர்மதி	3
சிங்கார	31	புரிவரும்	29	விதிசொற்படி	14
சிட்டர்தொழு	27	புலிகொள்பலாச்	25	விரவுபொழி	30
சீலமறை	1	புனலுண்	26	விரும்புமணிப்	21
சுருதிபயின்	9	பூமருவு	18	விரும்புமலர்	30
				விளங்குமதி	31

உ

கணபதி துணை

திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா

காப்பு

வண்டுவனப் பிள்ளையார் துதி

(வெண்பா)

1. திருக்கழுக்குன் றத்துச் சிலேடைவெண்பாக் கூறக்
கருத்தளித்து நாயேனைக் காக்கும்—மருத்துளவார்
விண்டுவனப் பிள்ளையாம் வேதன்முத லோர்போற்றும்
வண்டுவனப் பிள்ளைதான் வந்து.

(குறிப்பு.) மரு துளவு - மணம் பொருந்திய துழாய். விண்டு வனம் பிள்ளையாம் வேதன் - திருமாலும் அழகை உடைய அவர் குமாரராகிய பிரமாவும். வண்டுவனப் பிள்ளையாரென்பது இத்தல விநாயகர் திருநாமம். இப்பெயர் பிரமர விநாயகரென்று வடமொழியில் வழங்கும். வண்டு வனப் பிள்ளை வந்து காக்கும் என்க. (க)

இதுவுமது

2. சீலமறை யோர்வாழ் திருக்கழுக்குன் றத்துவெண்பா
மாலையொரு நூறு மகிழ்ந்துரைக்க—நாலுவாய்
உள்ளானை யைந்துகர முள்ளானை யன்பரகம்
விள்ளானை நெஞ்சகமே வேண்டு.

(கு - பு.) நாலுவாய் - தொங்குகின்ற வாய், அன்பரது அகம்; அகம் - மனம். (உ)

வாழ்த்து

3. வாழ்கவா னஞ்செழுத்து வாழ்கவரன் வெண்ணீறு
வாழ்ககழுக் குன்றத்து வாழ்வார்கள்—வாழ்கபுவி
வாழ்கமறைச் சைவநெறி வாழ்கவரன் மெய்யடியார்
வாழ்கமுத னால்வர்சொலும் வாக்கு.

(கு - பு.) மறைச் சைவநெறி - வைதிகச் சைவமார்க்கம். முதல் நால்வர் - திருஞானசம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர் நால்வர். (௩)

நூல்

1. திங்கடவழ் மாடந் திருப்பாற் கடனேராய்க்
கங்கைபணை நேராங் கழுக்குன்றே—மங்கை
உருவாக் களித்தா னுலகெலா மென்னும்
திருவாக் களித்தான் சிலம்பு.

(கு - பு.) மாடம், திருப்பாற் கடலுக்கும் ஆகாய கங்கையின் கரைக்கும் உவமை. கங்கை அணை - கங்கையின் கரை. இங்கே கங்கையென்றது ஆகாய கங்கையை, மங்கை உருவா - உமாதேவியார் தம்முடைய திருமேனியின் ஒரு பக்கத்தில் அமைய. 'உலகெலாம்' என்னும் திருவாக்கைச் சேக்கிழாருக்கு அளித்தான். சிலம்பு - மலை. (க)

2. அம்பரத்திற் செல்குண்டை யண்மியவேய் கோயில்கொடிக்
கம்ப நிகராங் கழுக்குன்றே—நம்பும்
உருவரு வில்லா ரொருமுப் புரத்தார்
வெருவரு வில்லார் விருப்பு.

(கு - பு.) குண்டை - இடப ராசி. இடப ராசியை நெருங்கிய மூங்கில் திருக்கோயிலிலுள்ள இடபக்கொடியை உடைய துவச ஸ்தம்பத்தை ஒக்கும். உரு அரு இல்லார் - உருவத் திருமேனியும் அருவத் திருமேனியும் இல்லாதவர். வெருவரு வில்லார் - அஞ்சுதற்குக் காரணமான வில்லை உடையவர். (உ)

3. வண்டுமொய்த்த வெண்டா மரையை மதியென்னக்
கண்டுசிகி தாவுங் கழுக்குன்றே—சண்டனைமுன்
தள்ளிமலைக் கத்தன் றனிமலர்த்தாள் வீசினேன்
வெள்ளிமலைக் கத்தன் விருப்பு.

(கு - பு.) மதிக்கு வெண்டாமரையும், வண்டுக்கு அதிலுள்ள களங்கமும் உவமை. சிகி - கேது. சண்டனை - யமனை. மலைக்க - மலைப்பு அடையும்படி. வெள்ளிமலைக்கு அத்தன்; வெள்ளைமலைக் கத்தன் எனப் பிரித்து வெள்ளிமலையின் தலைவன் எனலும் ஆம், (ங)

4. அடியவர்போல் வெண்ணீ றணிந்தக்கம் பூண்டு
கடுவன் பணிகழுக் குன்றே—முடியினின்மண்
வைத்தன் பரையாண் மகதேவ னண்டர்தொழும்
அத்தன் பரையா னகம்.

(கு - பு.) அக்கம் - உருத்திராக்கமாலையை. கடுவன் - ஆண் குரங்கு. அன்பரை - திருவாதவூரரையும் வந்தியென்னும் பிட்டுவாணிச்சியையும். பரையான் - உமாதேவியை உடையவன். (ச)

5\. கொன்றை மரத்தைக் கொடிபடர்ந்து சுற்றமறிக்
கன்றுடையான் போலாங் கழுக்குன்றே—துன்றுதிரு
நாவண் கரத்த னலவரவக் கங்கணஞ்சேர்
பூவண் கரத்தன் பொருப்பு.

(கு - பு.) மறிக்கன்று - மான்கன்று. கொன்றை சிவபிரானுக்கும், அதிற் படர்ந்த பச்சைக்கொடி அம்பிகைக்கும் உவமை. திரு நா அண் கரத்தன் - திரு நாவை அண்ணிய விடத்தை உடையவன்; கரம் - விடம். வண் கரத்தன் - வண்மையையுடைய திருக் கரத்தை உடையவன். (ரு)

6\. விண்ணூர் மதிமணஞ்செய் வேடர்பந்த ரிற்கட்டும்
கண்ணாடி போலாங் கழுக்குன்றே—நண்ணார்
செருக்கடவூ ரத்தத் திகிரி விடையோன்
திருக்கடவூ ரத்தன் சிலம்பு.

(கு - பு.) மதிக்குக் கண்ணாடி உவமை. நண்ணார் - பகைவருடைய. செருக்கு அட - வீரமிகுதியை அடுதற்கு. ஊர் விடையோன் - ஊர்ந்த விடையோன்; விடை - இடபம். அத்தத் திகிரி விடையென்றது திருமாலாகிய இடபத்தை; அத்தம் - கை; திகிரி - சக்கரம். திருக்கடவூர் - ஒரு தலம். (சா)

7\. சந்தமிகுங் காந்தளிடைச் சார்மதிய மாதர்கள்கைக்
கந்துக மேய்க்குங் கழுக்குன்றே—இந்து
சிகரத்து வைத்தான் செயிர்த்தரக்கன் றோள்கள்
தகரத்து வைத்தான் றலம்.

(கு - பு.) சந்தம் - அழகு, கந்துகம் ஏய்க்கும் - பந்தை ஒக்கும். காந்தளுக்கு மாதரின் கையும், மதிக்குப் பந்தும் உவமை. இந்து - சந்திரனை. சிகரத்து - முடியில். செயிர்த்து - கோபித்து. அரக்கன் - இராவணனுடைய. தகரும்படி துவைத்தவன். (எ)

8\. பிள்ளைமதி யைக்குறவர் பேரேனக் கோடென்று
கள்ளமுட னெட்டுங் கழுக்குன்றே—கொள்ளும்
அலையாலங் காட்டினா ளுருங் களத்துத்
தலையாலங் காட்டினான் சார்வு.

(கு - பு.) பிள்ளைமதியை - பிறையை. ஏனக் கோடு - பன்றியின் கொம்பு. அலை - பாற்கடலில் தோன்றிய; அலை : ஆகுபெயர். களத்து ஆலத்தைக் காட்டியவர்; களத்து - கழுத்தில்; ஆலம் - விடம். தலையாலங் காடு : ஒரு திருப்பதி. (அ)

9. குன்மம் படுகாசங் குட்ட முதலாய
கன்மவினை நீக்குங் கழுக்குன்றே—வன்மனத்தர்
காண்கைக் கரியான் கருதுமிரண் டாயிரங்கோட்
டேண்கைக் கரியா னிடம்.

(கு - பு.) காசம் - ஒருவகை நோய். குட்டம் - குஷ்டநோய். காண்கைக்கு - காண்பதற்கு. ஏண் - வலிமையை உடைய. கரி - யானை ; இரண்டாயிரம் கொம்புகளையுடைய யானையென்றது ஐராவணத்தை ; “நிரை நிரை, ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின், வெண்ணிறச் செங்கண் வேழம்” (கோயினுன்மணிமாலை, 4.) (௯)

10. வாய்ந்தகழை முத்த மதிக்கதிர்வீ சச்சந்த்ர
காந்தநீ ரூறுங் கழுக்குன்றே—சேந்தமலர்த்
தாளா னனந்தந் தவழ்கடலி னஞ்சருந்தி
மாளா னனந்தன் வரை.

(கு - பு.) கழை - மூங்கிலின். முத்தம் மதிக்கதிரை வீச. அநந்தம் தவழ் - அழகிய சங்கங்கள் தவழும். அனந்தன் - முடிவில்லாதவன். (௧௦)

11. மாணிக்கப் பாறையுறு மாதர்கம லாசனிபோல்
காணத் திகழுங் கழுக்குன்றே—பூணும்வினை
விஞ்சாக் கையினுன் மெலியாது வந்தாளும்
தஞ்சாக் கையினுன் றலம்.

(கு - பு.) கமலாசனி - திருமகள். மாணிக்கப் பாறைக்குச் செந்தாமரைமலர் உவமை. வினைவிஞ்சுகின்ற ஆக்கையில் நான் மெலியாமல். தஞ்சாக்கை : வைப்புத் தலங்களுள் ஒன்று ; “பழனம் பாம்புரந தஞ்சைதஞ் சாக்கையே” (சுந்தர. தேவாரம்.) (௧௧)

12. விண்டொடர்மே டம்வருடை வேங்கை யருகிருத்தல்
கண்டுபய நீங்குங் கழுக்குன்றே—தொண்டர்வினைக்
கோடத்து வந்தான் குறைத்தா ஞெருவேடு
வேடத்து வந்தான் விருப்பு.

(கு - பு.) வேங்கைப் புலியின் அருகில் வரையாடு அச்சமின்றியிருத்தலே மேடராசி கண்டு பயம் நீங்கும். வருடை - வரையாடு; தம்முள் பகைமை உள்ள விலங்குகளும் இத்தலத்தில் பகைமை யின்றி வாழ்கின்றன என்பது கருத்து. வினைக்கோள் தத்துவம் - வினையாற் கொள்ளப்படும் தத்துவங்களை. வேடு வேடம் - வேட்டுவ வடிவம். அருச்சுனன் தவத்தைச் சோதித்தற்கு வேட்டுவ வேடத்தோடு வந்தான். (கஉ)

13. மாந்தளிர்க்கை யேந்திவன மான்றேனிற் றோய்க்கமதி
காந்திமிகுத் தோங்குங் கழுக்குன்றே—சாந்தம்
தகவருந்த வந்தான் றழைத்தசிறுத் தொண்டர்
மகவருந்த வந்தான் மனை.

(கு - பு.) மாந்தளிர்க்கை - மாந்தளிராகிய கையில் வனமான் - வனமாகிய பெண்; எழுவாய். தேனில் தோய்க்கப்பெற்றதனால் மதி ஒளி மிகுத்து ஓங்கும்; காந்தி - ஒளி. சாந்தமும் தகவும் அருந்தவமும் தழைத்த; தான்: அசைநிலை. மகவை அருந்துதற்கு. (கஙு)

14. சேல்வெருண்டு பாயவரைத் தேனிறால் கீண்டுபுனற்
கால்வழிய வோடுங் கழுக்குன்றே—மால்கெட்டுத்
துன்னும் பரியான் சுகமுறவே யாள்வன்மறை
என்னும் பரியா னிடம்.

(கு - பு.) இறால் - தேனடை. கால் - கால்வாய். தேன் ஓடும் எனக் கூட்டுக. மால் - மயக்கம். துன் உம்பர் யான் சுகமுற; உம்பர் - தேவலோகத்திற் சென்று. மறை என்னும் பரி - வேதக்குதிரை. (கச)

15. அண்டர்தொழுங் காழியர்கோ னப்பர்திரு வன்றொண்டர்
கண்டுதமிழ் பாடுங் கழுக்குன்றே—தொண்டருக்குப்
பஞ்ச முகத்தான் படிக்கா சருளினன்
பஞ்ச முகத்தான் பதி.

(கு - பு.) காழியர்கோன் - சம்பந்தர். இம் மூவரும் கழுக்குன்று சிவலிங்க வடிவமாகத் தோற்றினமையின், மேல் ஏறுமல் கீழே அக்கினி மூலையில் நின்று பாடினார்கள். அங்ஙனம் நின்று பாடிய இடம் மூவர்பேட்டை என்னும் பெயரால் இக்காலத்து வழங்கப்படுகின்றது. அங்கே மூவர் கோயில் உண்டு. மலை சிவபெருமான் வடிவமென்பதைப் புலப்படுத்த மலையின் சுற்றுப்பக்கத்தில் கீழே மலையை நோக்கியவண்ணமாகத் திருநந்தி தேவர்களின் வடிவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. தொண்டருக்கு-திருஞானசம்பந்தருக்கும் அப்பருக்கும். பஞ்சம் உகும்படி படிக்காசு அருளி

யது திருவீழிமிழலையில்; அரிசிற்கரைப்புத்தூரிற் புகழ்த்துணை நாயனாருக்குப் படிக்காசு அருளியதும் ஈண்டறிதற்பாலது; "அகத்தடிமை செய்யு மந்தணன்றா னரிசிற் புனல் கொண்டுவந் தாட்டுகின்றான், மிகத்தளர் வெய்திக் குடத்தையு நும் முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும், வகுத்தவனுக்கு நித்தற்படியும் வருமென்றொரு காசினை நின்றநன்றிப், புகழ்த்துணை கைப் புகச் செய்துகந்தீர் பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே" (சுந்தர. தே.) பஞ்சமுகத்தான் - சத்தியோசாதம் முதலிய ஐந்து திருமுகங்களை உடையவன். (கரு)

16. ஏந்திழையார் தங்கரத்தி லேய்வதுபோற் பைங்கிள்ளை
காந்தளிடை மேவுங் கழுக்குன்றே—பாந்தணாண்
பூட்டியவில் லத்தர் பொழிலேழோ டேழீன்று
காட்டிய வில்லத்தர் காப்பு.

(கு - பு.) காந்தட்பூ ஏந்திழையார் கைக்கு உவமை. பெண்கள் கையில் கிளியைத் தாங்கியிருத்தல் மரபு. பாந்தள் நாண் - வாசுகி என்னும் பாம்பாகிய நாணை. அத்தர் - கையை உடையவர். பொழில் - உலகங்கள். இல்லத்தர் - மனைவியாகிய உமாதேவியை யுடையார்; இல்லம் - மனைவி. (கசு)

17. மாதர்நடங் கண்டு மயின்மறைய நாகங்கள்
காதலுட னாடுங் கழுக்குன்றே—ஓதும்
கலிக்கம் பனகத்தர் காணு மடியார்
கலிக்கம் பனகத்தர் காப்பு.

(கு - பு.) நடம் - நடனத்தை. மயில் மறைய - நாணத்தால் மயில் மறைந்துவிட. காதலுடன் ஆடும்: மயில் நீங்கினமையால் பாம்புகள் காதலுடன் ஆடின. கலிக்கம்பன் அகத்தர் - கலிக்கம்ப நாயனாரது மனத்தில் உள்ளார். அடியார்களுடைய கலிக்கு அம்பு அன்ன கத்தர்; கலிக்கு - வறுமையாகிய பகையை வெல்லுதற்கு. கத்தர் - கர்த்தர்; தலைவர். (கஎ)

18. இமிர்செம் மணிகதிர்போ லெங்குமொளி வீசக்
கமலமல ருங்கழுக் குன்றே—தமர
மறைக்கு மருக னலனிமய மால்வெற்
பிறைக்கு மருக னிடம்.

(கு - பு.) இமிர் - தழைத்த. செம்மணி - மாணிக்கம்; எழுவாய். கதிர்போல் - சூரியனைப்போல். தமரம் - முழக்கத்தை உடைய. மறைக்கும்

அருகன் அலன் - வேதங்களுக்கும் எட்டாதவன்; அருகு - சமீபம்; உம்மை உயர்வு சிறப்பு. மால் - பெரிய. இமயமாகிய வெற்பிறைக்கு மருகன். (கஅ)

19. மதிதவழு மாட மரகதத்தி னாற்செங்
கதிர்பசுமை யாங்கழுக் குன்றே—வதியும்
மதியரவம் பாற்றினான் வாழ்த்தி வணங்கு
மதியரவம் பாற்றினான் வாழ்வு.

(கு - பு.) மாடத்தில் அழுத்திய மரகதமணியினாலே. செங்கதிர் - சூரியன். மதி அரவு அம்பு ஆற்றினான் - சந்திரனையும் பாம்பையும் ஆகாச கங்கையையும் தரித்தவன். வாழ்த்தி வணங்கும் மதியை (புத்தியை) உடையவரது அவத்தினை நீக்கியவன்; அவம் - பொல்லாங்கை. (கக)

20. தொண்டின்மிகு வாதவூர்த் தோன்றல் குருவடிவம்
கண்டு களிக்குங் கழுக்குன்றே—விண்டுமுனம்
வேகத்தா னுகைத்தான் மேவியுகைத் தானுமையாள்
பாகத்தா னாகத்தான் பற்று.

(கு - பு.) வாதவூர்த் தோன்றல் - மாணிக்கவாசகர். திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் கண்ட குருவடிவத்தை இத் தலத்திற் கண்டு களித்தமை, "கலங்கினேன் கலங் காம லேவந்து காட்டினாய்கழுக் குன்றிலே" (திருவா.), "கழுக்குன்றத்தரிபிரமர் காணானைக் கண்டானைக் கருத்துள் வைப்பாம்" (திருக்கழுக்குன்றப்.), "வழுக்கில் பெருந்துறையில் வாழ்வித்த கோலம், கழுக்குன்றிற் கண்ட கவி" (ஏகாம் பரநாத ருலா) என்பவற்றால் விளங்கும்; இதற்கு அறிகுறியாக, திருமலையின்மேல் ஏறும் வழி தொடங்கும் இடத்தில் மேல்புறத்தில் ஒரு மண்டபமும், அதில் சிவபெருமான் திருவடிநிலைகளும் மாணிக்கவாசகர் திருவுருவமும் இருக்கின்றன. விண்டு - திருமால். வேகத்து ஆன் ஆக; விண்டு ஆன் ஆக; ஆன் - இடபம். உகைத்தான் - செலுத்தினவர். நாகத்தான் - பாம்புகளை ஆபரணமாக உடையவர். (உ0)

21. குலவுமந்த ரத்துவருங் கோளரவைக் கண்டு
கலவமயி லுவகழுக் குன்றே—குலவரியாம்
மோட்டாமை யோட்டினான் மூளுநமன் கையிலெனைக்
காட்டாமை யோட்டினான் காப்பு.

(கு - பு.) அந்தரத்து - ஆகாயத்தில். கோளரவை - இராகு கேதுக்களாகிய பாம்புகளை. கலவமயில் - கலாபத்தை உடைய மயில்கள். அரி

யாம் மோட்டு ஆமை ஓட்டினான்; அரி - திருமால்; மோடு - பெருமை; ஆமை ஓடு - ஆமையின் முதுகோடு. நமன் - யமனுடைய. காட்டாமை-காட்டிக்கொடாமல். ஓட்டினான் - என்னை நல்வழியிற் செலுத்தினவன். (உக)

22. வானதிதோ யும்பர் மடவனங்கு றத்தியர்தம்
கானடைகண் டேங்குங் கழுக்குன்றே—ஞானமே
ஆன்றதிருக் கண்ணார்த மற்பகத்தார் செவ்வனலைக்
கான்றதிருக் கண்ணார்தங் காப்பு.

(கு - பு.) வான் நதி - ஆகாய கங்கையில். உம்பர் மட அனம் - மேலே உள்ள இளமையான அன்னங்கள். கால் நடை கண்டு ஏங்கும். ஆன்ற - அமைந்த. திருக்கு அண்ணார் தம் அற்பு அகத்தார்; திருக்கு - மாறுபாடு; அற்பு - அன்பு. திருக்கண்ணார் என்பன ஒருசொன் னீர்மையன. அனலை கான்ற திரு கண்ணார்; கண் - நெற்றிக் கண், (உஉ)

23. தாமரையம் பாற்கார் முகவேழத் தால்வனத்தாற்
காம னிகராங் கழுக்குன்றே—மாமன்றீ
யாகம வித்தா னியம்புமிரு பத்தெட்டாம்
ஆகம வித்தா னகம்.

(கு - பு.) முதல் இரண்டு அடிகள் மலைக்கும் மன்மதனுக்கும் சிலேடை. தாமரை அம்பு - தாமரை மலர்களோடு கூடிய நீர், தாமரைப் பூவாகிய பாணம். கார்முக வேழம் - கரிய முகத்தை உடைய யானை, வில்லாகிய கரும்பு; கார்முகம் - வில்; வேழம் - கரும்பு. வனம் - காடு, அழகு. காமன் நிகர் ஆம் - மன்மதனை ஒக்கும். மாமன் - தக்கனுடைய. தீ யாகம் - தீயை உடைய யாகம்; தீச்செயலை யுடைய யாகமுமாம். ஆகம வித்தான் - ஆகமங்களுக்கு மூல காரணன். (உங)

24. ஆம்பன்முகி லூர்ந்துசசி யார்ந்துபல கண்மருவிக்
காம்பின் திரனுங் கழுக்குன்றே—ஆம்புகழ்சேர்
ஆலவா யுள்ளா னகத்தன்பி லாரையரு
ளாலவா யுள்ளா னகம்.

(கு - பு.) மூங்கிலுக்கும் இந்திரனுக்கும் சிலேடை. ஆம் பல்முகில் ஊர்ந்து - பலவாகிய மேகங்கள் ஏறப்பெற்று; யானையையும் மேகத்தையும் ஏறி; ஆம்பல் - யானை. சசி - சந்திரன், இந்திராணி. கண் - கணுக்கள், விழிகள், காம்பு - மூங்கில். ஆம் - மேன்மேலும் விருத்தியாகின்ற. ஆலவாயில் உள்ளவன்; ஆலவாய் - மதுரை. அருளால். அவாய் உள்ளான் - விரும்பி நினையாதவன். (உச)

25. சந்தமிகுந் தங்குறமான் சார்ந்துமயி லின்புற்றுக்
கந்த னிகராங் கழுக்குன்றே—அந்தமிகும்
அஞ்ச மறியா னருள்வரங்கேட் கும்மடியார்
அஞ்ச மறியா னகம்.

(கு - பு.) முருகவேளுக்கும் மலைக்கும் சிலேடை. சந்தம் - அழகு; சந்தனமரம். அம் குறமான் சார்ந்து; குறமான் - வள்ளி, அங்கு உற மான் சார்ந்து; உற - மிக; மான் - ஒருவகை மிருகம். மயில் இன்புற்று - மயிலில் இருந்து இன்புற்று; மேகத்தால் இன்புற்று; மய் - மை; போலி, மை இல் இன்புற்று எனப் பிரித்துக் குற்றமில்லாத இன்பத்தை அடைந்து என்றலுமாம். அந்தம் - அழகு. அஞ்சம் அறியான் - பிரமனாகிய அன்னப் பறவையால் அறியப்படாதவன், அடியார் அஞ்சும்படி மறியான்; மறியான் - இல்லை என்னான். (உரு)

26. சுருதிபயின் றோதிமமாய்ச் சூழ்கலைமா னேந்திக்
கருதுமய னுங்கழுக் குன்றே—பொருமமணர்
நட்டரா கத்தா னலிவித்தார் சொற்பதிகம்
நட்டரா கத்தா னகர்.

(கு - பு.) பிரமனுக்கும் மலைக்கும் சிலேடை. சுருதி பயின்று - வேதம் தங்கப்பெற்று. இம்மலை வேதவடிவென்று கூறப்படும்; ௩௩-ஆம் செய்யுளைப் பார்க்க. ஓதிமம் - அன்னம், மலை. கலைமான் - கலைமகளை, ஆண்மானையும் பெண்மானையும். அயன் - பிரமன். அமணர் நட்டராக தான் நலிவித்தார் - நஷ்டராகும்படி அமணரை நலிவித்த சம்பந்தமூர்த்திநாயனாரது; பதிக நட்டராகத்தான் - நட்டராகப் பதிகத்தையுடையவர்; நட்டராகம்: ஒரு பண். (உசா)

27. கண்ணரனூர் தாட்கிட்டுக் காலேனை மேனிவந்து
கண்ணனெனு மாலாங் கழுக்குன்றே—நண்ணும்
மறைக்காட்டி னூர்வான் மகிழ்பாசூ ரிற்பாம்
பிறைக்காட்டி னூர்வா ழிடம்.

(கு - பு.) திருமாலுக்கும் மலைக்கும் சிலேடை. கண் - விழியை, இடத்தை. ஏனம்மேனி வந்து - வராகமேனி வரப்பெற்று; ஆதிவராகமாகி; ஏனம் மேல் நிவந்து; ஏனம் - பன்றி; நிவந்து - பரவி. கண்ணன் எனும்-கரிய நிறத்தை யுடையவனென்று சொல்லப்படுகின்ற. மறைக்காடு-வேதாரணியம். பாசூரில் பாம்பு இறைக்கு ஆட்டினூர்: திருப்பாசூரில் சில காலம் இருந்து அரசாட்சி செய்த கரிகாலச் சோழனென்பவனைக் கொல்ல நினைந்து அவன் விரோதியாகிய ஒரு சிற்றரசன் குடத்தில் வைத்தனுப்பிய

கொடிய பாம்பொன்றைத் திருப்பாசூர்ப் பெருமான் ஒரு பிடாரவடிவ முற்றுவந்து பிடித்து ஆட்டி அப் பாம்பாலேயே அச்சிற்றரசனைக் கொல் வித்தாரென்பது அத்தல புராணத்துள் அரவமாட்டிய சருக்கத்திற் கண்ட வரலாறு; "வெற்றி யூருறை வேதிய ராவர்நல், ஒற்றி யேறுகந் தேறு மொருவனர், நெற்றிக் கண்ணினர் நீளர வந்தனைப், பற்றி யாட்டுவர் பாசூ ரடிகளே" (திருநா. தே.) (உஎ)

28. நிருத்தன் மகிழ்ந்துதவ நீடிமெய் யன்பர்
கருத்தைநிகர்க் குங்கழுக் குன்றே—வருத்தமுறு
மாலய மேயான் மருவா தருள்பூசல்
ஆலய மேயா னகம்.

(கு - பு.) அன்பர் கருத்துக்குர் மலைக்கும் சிலேடை. நிருத்தன் - சிவபிரான். நிருத்தனால் மகிழப்பெற்று. தவம் நீடி - தவம் மிகுந்து; தவ நீடி - மிக உயர்ந்து. மால் அயமே - மயக்கத்தையும் ஐயத்தையும்; அயம் - ஐயம்; போலி. ஏ: அசை நிலை. யான் மருவாதபடி. பூசல் ஆலயம் - பூச லார்நாயனாரால் இதயத்தில் அமைக்கப்பெற்ற திருக்கோயிலில். (உஅ)

29. விண்டு பிரமன் விழைந்துகழு கைத்தொழுதல்
கண்டவா யேங்குங் கழுக்குன்றே—அண்டர்தொழும்
பாததா னந்தம் பணிகொடிருப் பாணர்யாழ்
நாதத்தா னந்த னகர்.

(கு - பு.) பிரமன் விழைந்து கழுகைத் தொழுதல் விண்டு கண்டு அவாய் ஏங்கும்; விண்டு - திருமால்; அவாய் - விரும்பி; "கண்டவாயுள் ளேங்கும்" எனவும் பாடம். பிரமன் ஒரு கற்பத்தில் கழுகுருவெடுத்துச் சிவபெருமான் திருமுடியைத் தேடினர் என்பது ஒரு வரலாறு. "ஏனங் கழு கானவருன்னைமு னென்கொல், வானந்தல மண்டியுங் கண்டிலா வாறே", "பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும் பூந்துழாய் புனைந்த மாலும், ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந் துறநாடி யுண்மை காணு" (திருஞா. தே.), "கழுகுரு வெடுத்து வேதன் ககனமுற் றுருவிச் சென்றும், வழுவற வப்பாற் செல்லும் வலியிழந்து" (திருநாகைக் காரோணப் புராணம், பிரமன் பூசித்த. 20.) தான் அரன் முடியைக் காணவிட்டாலும் தன்னைப்போன்ற கழுகு காணுதலால் அதைப் பிரமன் வணங்கினன். அதுகண்ட திருமால், "நாம் தொழுவதற்கு இத் தலத்தில் இறைவனை வழி படும் பன்றி ஒன்றைக் காணப் பெற்றிலேம்" என்று ஏங்கினன் என்பது கருத்து. நந்தம் பணிகொள் - நம்முடைய தொழும்பை ஏற்றுக்கொண்ட. திருநீலகண்ட யாழ்ப்பாணரது யாழின் நாதத்தில் ஆனந்தன். (உகூ)

30. பூவைசம யத்தலைவர் போற்றுமொழி பாடவும்பர்
காவில் வணங்குங் கழுக்குன்றே—சேவையர்கோன்
தொண்டர் புராணஞ் சொலமுன் னருள்கூர்ந்த
அண்டர் புராண னகம்.

(கு - பு.) பூவை - நாகணவாய்ப்புள். சமயத் தலைவர் - சைவசமயாசாரியர்களுடைய. போற்றுமொழி என்றது தேவார திருவாசகங்களை. பூவை மொழிகளைப் பாட. சேவையர்கோன் - சேக்கிழார். தொண்டர் புராணம் - பெரியபுராணம். அண்டர் புராணன் தேவர்களுக்கு ஆதியாக உள்ளவன்; புராணம் - பழமை. (௩௦)

31. மீண்டு மெயினர்கணை விட்டுமுயல் வேட்டைசெயல்
கண்டுமதி யஞ்சுங் கழுக்குன்றே—பண்டைமறை
ஈட்டுமஞ்ச னத்த னிருபாலு ளானன்பர்
ஆட்டுமஞ்ச னத்த னகம்.

(கு - பு.) எயினர் கணையை ஏவி முயல்வேட்டையைச் செய்தலை மதி கண்டு அஞ்சும்; எயினர் - வேடர்; கணை - அம்பு; மதி அஞ்சியது, தன்னிடமுள்ள முயலையும் அவர்கள் எய்வார்களோ என்பது பற்றி. மறை ஈட்டும் அஞ்சனையும் நத்தனையும் இருபாலுளான்; அஞ்சன் - அன்னவாகனத்தை உடைய பிரமன்; நத்தன் - சங்கை உடையவன்; திருமால்; வலப்பாலும் இடப்பாலும் முறையே அயனையும் அரியையும் தோற்றுவித்து ஒற்றைத் திருவடியையு முடையராய்த் தோன்றும் மூர்த்தி ஏகபாத ருத்திர ரெனப்படுவர்; "ஏழுலகு மாய்நின்ற வேக பாதர்" (திருவெண்காடு, திருத்தாண்டகம், 2); "கண்ணுதற்பிரான் மருங்கிரு கடவுளர் கப்புவிட் டெனத்தோன்றும், வண்ண முத்தலைப் படை" (திருவிளை. ரு: 111.) அன்பர் ஆட்டுகின்ற திருமஞ்சனத்தை உடையவன். (௩௧)

32. அரனை யவமதித்த லாலன்பி னந்தி
கருடனைச் சீறுகழுக் குன்றே—அருளின்
உருத்தலை யூரார் கலிவிட முண்போர்
திருத்தலை யூரார் சிலம்பு.

(கு - பு.) கருடன் அரனை அவமதித்ததால் அன்பினையுடைய நந்தி அவனைக் கோபித்துச் சபித்தாரென்பது இத் தலவரலாறு (திருக்கழுக்குன்றப். காருடச் சருக்கம்.) உருத்து அலை ஊர் ஆர்கலியில் தோன்றிய விடம்; ஆர்கலி - கடல். திருத்தலையூர் - உருத்திர பசுபதி நாயனார் அவதரித்த தலம். (௩௨)

33. மருவுமொரு நால்வேதம் வந்துகுன்ற மாகிக்
கருதவர நல்குகழுக் குன்றே—திருநடஞ்செய்
பாதாம் புயத்தர்விற் பார்த்தனடிக் கத்தழும்பு
மீதாம் புயத்தர் விழைவு.

(கு - பு.) நான்கு வேதங்களும் சிவாஞ்ஞையால் இம் மலைவடிவ முற்றிருக்கின்றன; சிவபிரான் மலைக்கொழுந்தாக எழுந்தருளியிருக்கின்றனர் என்பது வரலாறு (திருக்கழுக்குன்றப், வேதகிரிச்.) நடஞ்செய் பாத அம்புயத்தர்; அம்புயம் - தாமரை மலர். பார்த்தன் அடிக்க மீது தழும்பு ஆகின்ற புயத்தர்; அடிக்க - அடித்தலால். (௩௩)

34. உய்வானோர் கோடி யுருத்திரர்கள் பூசித்துக்
கையாற் றொழுஞ்சீர்க் கழுக்குன்றே—மையார்விண்
வீசு பதத்தான் விரிஞ்சன் றொழவரியான்
பாசு பதத்தான் பதி.

(கு - பு.) கோடிஉருத்திரர்கள் இத்தலத்தில் இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றார் (திருக்கழுக்குன்றப். உருத்திரகோடிச்.) மை ஆர் - கருமை பொருந்திய. விண் வீசு பதத்தான் - விண்ணுலகை யளந்த பாதத்தை யுடைய திருமால்; விரிஞ்சன் - பிரமன்; அரியும் அயனும். விண்வீசு பதத்தானென்பதற்கு ஊர்த்துவ தாண்டவத்தை யுடையவ ரென்றலுமாம். பாசுபதாஸ்திரத்தை உடையவர். (௩௪)

35. அண்ணன் மொழிமறுத்த லானந்தி வந்துதவம்
கண்ண வருளுங் கழுக்குன்றே—நண்ணியமான்
துஞ்சாக் கரத்தர் தொழுமன்பர் தாமறவாப்
பஞ்சாக் கரத்தர் பதி.

(கு - பு.) 'கருடனை வருத்தாதே' என்ற சிவபெருமானுடைய கட்டளையை மறுத்த திருநந்திதேவர் இத்தலத்தில் வந்து தவமியற்றி அக்குற்றத்தைப் போக்கிக்கொண்டனர். (திருக்கழுக்குன்றப். நந்திதவச்.) கண்ண - கருத. மான் துஞ்சாத கரத்தை உடையவர். ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உடையவர். (௩௫)

36. வாட்டமின்மார்க் கண்டரான் மாயிகன் பன்றியாக்
காட்டிற் றிரியுங் கழுக்குன்றே—நாட்டும்
அராப்பள்ளி யண்ண லறிதுயின்மால் காணச்
சிராப்பள்ளி யண்ணல் சிலம்பு.

(கு - பு.) மாயீகனென்னு மசுரன் பன்றியுருவங்கொண்டு வந்து இத் தலத்தைச் சார்ந்த காட்டிலுள்ள மிருகங்களை வருத்திக்கொண்டிருந்ததைக் கண்ட மார்க்கண்டேயர், அப்பன்றி யுருவோடே திரியும்படி அவனைச் சபித்தனர் (திருக்கழுக்குன்றப். மாயீகச்.); அராப்பள்ளியை அண்ணிய நல்ல அறிதுயில் கொண்ட திருமால்; அராப்பள்ளி - பாம்பாகிய படுக்கையை. சிராப்பள்ளி: ஒரு தலம். (௩௬)

37. நேருமொரு மாதுபந்து நேடிப் பிழையுற்ற
காரியர்ச் சிக்குங் கழுக்குன்றே—சீரியமண்
பிட்டுக் களித்தான் பெருமுடியில் வைத்தடியும்
பட்டுக் களித்தான் பதி.

(கு - பு.) காரி - இந்திரன், ஒரு தெய்வப் பெண்ணினுடைய பந்தைத் தேடிச்சென்ற இந்திரன், வேறு வேடம் பூண்டு உமாதேவியாரோடு சதுரங்க மாடிக்கொண்டிருந்த சிவபெருமான் பக்கத்தில் அப் பந்து இருத்தல் கண்டு அப் பந்தைக் கவர்ந்தவர் அவரென்று நினைந்து அவரைச் சிவபெருமானென்றறியாமற் செய்த பிழையால் வந்த துன்பத்தை இத்தலத்தில் வந்து வழிபட்டுப் போக்கிக்கொண்டனன் (கழுக்குன்றப், இந்திரச்.); பிட்டுக்குச் சீரிய மண்ணை அள்ளி; மண்ணைப் பெருமுடியில் வைத்து அடியும் பட்டுக் களித்தான். (௩௭)

38. எண்ணும் பிருகு விசைத்தபடி புண்டரிகக்
கண்ணன்பூ சித்த கழுக்குன்றே—நண்ணும்
மருமிக் களித்தார் வயங்களகப் பாடல்
தருமிக் களித்தார் தலம்.

(கு - பு.) புண்டரிகக் கண்ணன் - திருமால்; தாம் பிருகுமுனிவரது மனைவியைக் கொன்ற பாவத்தை இத்தலத்திற்கு வந்து இறைவனைப் பூசித்துப் போக்கிக் கொண்டார் (கழுக்குன்றப். நாராயணச்.); மரு மிக்க அளி தார் - வாசனை மிகுந்த வண்டையுடைய மாலை. மிக்க அளி: தொகுத்தல் விகாரம். அளகப் பாடல் - கூந்தலைப்பற்றிய பாடல்; என்றது, "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகைப் பாடலை. தருமிக்கு அளித்தார். (௩௮)

39. விஞ்சியசா வித்திரிசொல் வெஞ்சாப நீங்கமலர்க்
கஞ்சன் பணியுங் கழுக்குன்றே—தஞ்சமெனச்
சுந்தரப்பே ரம்பெய்தார் சூழுஞ் சடைமுடிக்கன்
றந்தரப்பே ரம்பெய்தா ரார்வு.

(கு - பு.) தம்முடைய தேவியருள் கலைமகளையே விரும்பி இருந்தமை பற்றிச் சாவித்திரியாற் சபிக்கப்பெற்ற பிரமதேவர் இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு அச்சாபத்துன்பத்தை நீக்கிக்கொண்டார் (கழுக் குன்றப். சதுமுகச்.) தஞ்சம் என - யான் நுமது அடைக்கல மென்று பாண்டியன் சொல்ல. சுந்தரப்பேர் அம்பு - சுந்தரன் என்னும் பெயரை எழுதியுள்ள அம்பை; எய்தது மதுரைச் சோமசுந்தரக் கடவுள் திருவிளை யாடல்களுள் ஒன்று. அந்தரம் பேர் அம் - ஆகாயகங்கை; அம் - நீர் (௩௯)

40. எண்மா வசுக்க ளியல்பொடுவெண் ணீறணிந்து
கண்மணிபூண் டேத்துங் கழுக்குன்றே—திண்மைமிகும்
கோளர வத்தினன் கூடா வகையருள்பூண்
வாளர வத்தினன் வாழ்வு.

(கு - பு.) கண்மணி - உருத்திராக்கம். காமதேனுவின் பாலைக்கறக்க முயன்ற எட்டாம்வசுவும், அச்செயலைத் தடைசெய்யாமலிருந்த ஏனைவசுக் கள் எழுவரும் அக்காமதேனுவாற் சபிக்கப்பெற்றுக் காசியில் நூறு வருஷம் புலையர்களாக மயானங்காத்திருந்து பின்பு இத்தலத்திற்கு வந்து வழிபட்டு அப்பிழை முற்றும் தீர்ந்துய்ந்தார்கள் (கழுக்குன்றப். வசுதேவச்.) திண்மை மிகுந்த கோளர் அவத்தில் நான் கூடாவகை; கோளர் - கோள் கூறுவார்களது. பூணுகிய வாள் அரவத்தினன்; அரவம் - பாம்பு. (௪௰)

41. விதிசொற் படியரக்கர் வெம்மை தவிர்ப்பான்
கதிரவர் போற்றுகழுக் குன்றே—எதிரும்
செருவிற்கோ லத்தத் திகிரியனைக் கொண்ட
திருவிற்கோ லத்தர் சிலம்பு.

(கு - பு.) விதிசொற்படி அரக்கருடைய வெம்மையைத் தவிர்க்கும் பொருட்டுக் கதிரவர்கள் சிவபிரானைப் போற்றும் கழுக்குன்று; விதி - பிர மன்; அரக்கர் - மந்தேகர் முதலிய அசுரர். வெம்மை - இங்கே தடுத்தல். பன்னிரண்டு சூரியர்களும் பிரமாவின் கட்டளைப்படி இத்தலத்திற்கு வந்து வழிபட்டு மந்தேகர் முதலிய பகையசுரர்கள் நாள்தோறும் தம்க்குச்செய்து வந்த இடையூற்றைப் போக்கிக்கொண்டனர். செருவில் - போரில். அத்தத் திகிரியனைக் கோலாகக் கொண்ட - கையில் சக்கராயுதத்தையுடைய திருமாலை அம்பாகக் கொண்ட. திருவிற்கோலம்: ஒரு திருப்பதி; இப் பொழுது அது திருக்கூவமென்று வழங்கப்படுகின்றது. (௪௧)

42. முனிவர்கணம் பர்ணிிய முன்னவனை வேண்டிக்
கனிவொடு வாழ்த்துகழுக் குன்றே—இனிதின்

இருக்கேத் திரத்த வெழில்கொள்சூ லத்தர்
குருக்கேத் திரத்தர் குடி.

(கு - பு.) கணம் - கூட்டம். பாணினியம் - ஒருவகை வியாகரணம், சில முனிவர்கள் இத்தலத்தில் இறைவனைப் பூசித்துப் பாணினீய வியாகரணத்தின் பொருளைத் தெளிந்தார்கள் (கழுக்குன்றப், முனிகணச்.); இருக்கு ஏத்து இரத்த எழில்கொள் சூலத்தர்; இருக்கு - வேதம்; இரத்த எழில் - செந்நிறமுடைய அழகு; இறைவனுக்கு அடை. குருக்கேத்திரம் - குருக்ஷேத்திரம்; இது வைப்புத்தலங்களுள் ஒன்று. (சஉ)

43. சங்கரனுர் சொன்மறுத்த தன்மையாற் சம்பாதி
கங்கெனவந் தேத்துங் கழுக்குன்றே—தங்கியவெங்
காமவே தத்தினுன் கன்ருத ளித்தாளும்
சாமவே தத்தினுன் சார்வு.

(கு - பு.) சம்பு ஆதி என்ற இருவர். கங்கு - கழுகு; கங்கமென்பதன் கடைக்குறை. இரண்டு முனிவர்கள் முத்தியை விரும்பித் தவம்புரியச் சிவபெருமான் கலியுகத்தில் முத்திபெறுவீர்களென்ன, இப்பொழுதே வேண்டுமென, மறுத்துக் கூறியதுபற்றி அவர் கட்டளைப்படி சம்பு ஆதி என்னும் பெயரையுடைய இரண்டு கழுகுகளாகிப் பூசிக்கின்றனர் (கழுக்குன்றப். கங்காசலச்.); காம ஏதத்தில் நான் கன்ருது; ஏதம் - துன்பம். (சந)

44 துன்னுபன்றி மாயிகன் ருெல்லுருவா வோர்பசுத்தான்
கன்னியுரு வான கழுக்குன்றே—என்னுள்
வதிய மலையார் மகிழுமிடப் பாலார்
பொதிய மலையார் பொருப்பு.

(கு - பு.) மார்க்கண்டேய முனிவராற் சபிக்கப்பெற்றுப் பன்றியுருவான மாயிகனும், நந்திதேவரது தவத்தைக் குலைக்கவந்து அவராற் சபிக்கப்பட்டுப் பசுவுருவான திலோத்தமையும், சுரகுருவென்னும் சோழவரசனுடைய அம்பினல் தம் சாபவுரு அழியப் பழைய உருவைப்பெற்றனர் (கழுக்குன்றப். பசுவராகச்.); வதி - தங்குகின்ற அமலையார் மகிழும் இடப்பாலார்; அமலையார் - உமாதேவியார். பொதியமலை - பொதியில் மலை; இது வைப்புத் தலங்களுள் ஒன்று. (சச)

45. கட்டங்கள் பாற்றுன்னக் காட்டுமலர் வாவிபொலாக்
கட்டங்கள் பாற்றுங் கழுக்குன்றே—கொட்டும்
தமருகக் கையான் றருபிழைசெய் தாலும்
தமருகக் கையான் றலம்,

(கு - பு.) கட்டங்கள் பால் துன்ன - நீராடற்குரிய துறைகள் தன்னிடத்துப் பொருந்த; கட்டம்: வடமொழிச் சிதைவு. பொல்லாத கஷ்டங்களைப் பாற்றும். வாவி: எழுவாய்; வாவி பாற்றும் என்க. கொட்டும் தமருகம் கையான்; தமருகம் - உடுக்கை. தமர் உக கையான் - அடியார்கள் கெடும்படி வெறுதவன். (சரு)

46. கைப்புக நல்கால் கடுஞ்சினம்விட் டோரைநமன்
கைப்புக நல்காக் கழுக்குன்றே—செப்புவரை
மத்தகநாட் டத்தான் வளைபாற் கடனிறத்தான்
மத்தகநாட் டத்தான் வரை.

(கு - பு.) கைப்பு உகு அனல் கால்கின்ற கடுஞ்சினத்தை விட்டவர்களை. நமன் கையில் புகும்படி. வரை மத்து - மந்தரமாகிய மத்தை. அகம் நாட்டத் தான்வளைந்த; வளை பாற்கடல் - சூழ்ந்த பாற்கடல்; தான் என்றது பாற்கடலை. மத்தக நாட்டத்தான் - நெற்றிக்கண்ணை உடையவர். (சசு)

47. காமிக வாக்குக் கருதியர்ச்சிப் போர்க்குமலர்
காமிக வாக்கு கழுக்குன்றே—தோமறுகல்
வல்லிபங் கானார் வளர்கரும்புண் ணச்செய்தோர்
வல்லிபங் கானார் வரை.

(கு - பு.) காமிக வாக்கு - காமிகாகமத்தின் வாக்கை. மலரைச் சோலைகள் மிக ஆக்குகின்ற; கா - சோலை. தோம் அறு கல் வல் இபம்; கல் இபம் - கல்லானை. கான் ஆர் வளர் கரும்பு; கான் - நறுமணம். கல் இபம் கரும்புண்ண. வல்லி - உமாதேவியாருடைய. பங்கு ஆனார் - பாகத்தை விட்டு நீங்காதவர். (சஎ)

48. காட்டத் தெரியுங் கனல்வேள்வி வானுலகம்
காட்டத் தெரியுங் கழுக்குன்றே—நீட்டும்
விடமருந் தானார் விறலப்பர் தந்நோய்
விடமருந் தானார் விருப்பு.

(கு - பு.) காட்டத்தினால் எரியும் கனல் வேள்வி; காட்டம் - விறகு; என்றது சமிதையை. வானுலகங் காட்டத் தெரியும்; காட்ட - காட்டுதலால்; தெரியும் - பலராலும் அறியப்படுகின்ற. விடம் அருந்திய. ஆனார் - இடபத்தை உடையவர்; ஆனார்: இடுகுறிப்பெயர் மாத்திரையாய் நின்றது. அப்பர் தம்முடைய சூலைநோயை விட்டுவிட மருந்து ஆனவர். (சஅ)

49. கழுகுநடு வாரமிதை காணும்வெளி யில்லாக்
கழுகு தொழுகழுக் குன்றே—கழுவிற்
சமணரை யேற்றினர் தானவர்கள் பால்வஞ்
சமணரை யேற்றினர் சார்வு.

(கு - பு.) கழுகு என்னும் மூன்றெழுத்தும் முறையே இடையில் ஆர்கின்ற அம், இதை, வெளி இல்லாக் கழுகு; இம் மூன்றெழுத்தும் நடுவில் பொருந்திய அம் இதை வெளியென்பவை முறையே அகம், இழுதை, வெகுளி என்பனவாம். அகம் - பாவம். இழுதை - அறிவின்மை. வெகுளி - கோபம். கழுகு - கழுகு வடிவங்கொண்ட இரு முனிவர். சமணரைக் கழுவில் ஏற்றினர். தானவர்கள்பால் வஞ்சம் அண் நரை ஏற்றினர்; வஞ்சத்தை அண்ணிய; நரை ஏற்றினர் - திருமாலாகிய வெள்ளிய இடபத்தை உடையவர். தானவர்பால் வஞ்சம் அண்ணியதென்றது திருமால் மோகினியாக வந்து அமுதத்தை அசுரருக்கு ஈயாமல் தேவர்களுக்கு மட்டும் கொடுத்த கபடச்செயலைக் குறித்தபடி. (சகூ)

50. ஆதியந்த மாகவிதி யார்பூ வணிவோர்கள்
காதலுட னேத்துங் கழுக்குன்றே—ஓதும்
இருக்கு மறியா னிடக்கரத்தெப் போழ்தும்
இருக்கு மறியா னிடம்.

(கு - பு.) வி, தி என்ற இரண்டெழுத்துக்களைத் தனக்கு முன்னும் பின்னும் முறையே பொருந்தப்பெற்ற பூ என்றது விபூதியை. விபூதி அணிவோர்கள் காதலுடன் ஏத்தும் கழுக்குன்றே. இருக்கும் அறியான் - வேதத்தினலும் அறியப்படாதவன். இடக் கரத்தில் எப்போதும் இருக்கின்ற மறியான்; மறி - மான்கன்று. (ருO)

இருபொருட் சிலேடை

51. உள்ளும் பரத்தையர்க ணுட்டுறவோர் மாரன்மலர்க்
கள்ளம் பொழியுங் கழுக்குன்றே—கொள்ளுமன்பின்
வாயிலா ருள்ள மணிக்கோவி லாக்கொண்ட
தாயிலா ருள்ள தலம்.

(கு - பு.) பரத்தையர்களுடைய கண், கள்ளத்தைப் பொழியும். உள்துறவோர் மாரனது மலர்களாகிய தேனையுடைய அம்பை ஒழியும். வாயிலார் என்ற நாயனருடைய உள்ளத்தை. தாய் இல்லார். (ருக)

முப்பொருட் சிலேடை

52. பூமருவு வண்டினங்கள் பூவையர்கண் கற்பகம்போற்
காமரம்பா டுற்ற கழுக்குன்றே—சேமமறி
ஆடுங்கா லத்தன் பணவியிடங் கொண்டவன்மால்
தேடுங்கா லத்தன் சிலம்பு.

(கு - பு.) வண்டினங்கள் காமரம் என்ற பண்ணைப் பாடுற்ற. பூவையருடைய கண் காமர் அம்பை ஆடுற்ற; ஆடுற்ற - வெற்றிகொண்ட. காவிலுள்ள மரம் கற்பக விருட்சம்போல் பாடுற்ற; பாடுற்ற - பெருமை வாய்ந்த. ஆடுங்காலத்து அன்பு அணவி சேம மறியை இடங்கொண்டவன்; அணவி - பொருந்தி; மறி - மான்கன்று. இடம் - இடக்கரத்தில் மால் தேடும் கால்களை உடைய அத்தன். (ருஉ)

இருபொருட் சிலேடை

53. செவ்விமயில் கோபஞ் சிவார்ச்சனைசெ யில்லிலைந்து
கவ்வியங்கு லாவுங் கழுக்குன்றே—எவ்வ
மலவிடக்கை யானகல வந்தாள்வோ னோர்மான்
நிலவிடக்கை யான்வாழ் நிலை.

(கு - பு.) செவ்வி - அழகை உடைய. மயில் கோபம் கவ்வி அங்கு உலாவும்; கோபம் - இந்திர கோபப் பூச்சி. இல்லில் - வீடுகளில். ஐந்து கவ்வியம் - பஞ்சகவ்வியம். எவ்வ மலமாகிய விடக்கை; எவ்வம் - துன்பம். விடக்கு - ஊன்; இங்கே தேகம்; யான் விடக்கை அகல வந்து ஆள்வோன். மான் நிலவு இடம் கையான்; மால் நிலவு இடக்கையானெனப் பிரித்துத் திருமால் விளங்குகின்ற இடப் பக்கத்தை யுடையவரெனக் கொள்ளுதலுமாம்; கை - பக்கம். (ருங)

54. தாவி லிளைஞர்மணஞ் சாருமிடந் தண்முகில்கள்
காவணமே லோங்குங் கழுக்குன்றே—பாவுரைத்து
நேசித்து வந்தார் நிறைபசிக்காக் கச்சூரில்
யாசித்து வந்தா ரிடம்.

(கு - பு.) தா இல் - வருத்த மில்லாத. இளைஞர் மணம் சாரும் இடத்தில் காவணம் மேல் ஓங்கும்; காவணம் - மணப்பந்தல். முகில்கள் காவை அண்ண மேல் ஓங்கும்; கா - சோலை. பாவை உரைத்து. நேசித்து வந்தார் - சுந்தரமூர்த்தி நாயனார். சுந்தரமூர்த்தி நாயனாருடைய பசி

யைத் தீர்க்கும்பொருட்டு யாசித்து உவந்தார்; யாசித்து - பிட்சை எடுத்து. கச்சூர் - திருக்கச்சூரென்ற தலம். (ருச)

55. செங்கை மழுவோன் சிரமுங் குருகினமும்
கங்கை யகலாக் கழுக்குன்றே—இங்கினிமேல்
எம்மைப் படையா னிணையில்பூ தங்களெனும்
செம்மைப் படையான் சிலம்பு.

(கு - பு.) மழுவோன் - சிவபிரானுடைய. சிரம் கங்கா நதியை அகலாத. குருகு இனம் கங்கை அகலாத; குருகு - நாரை; கங்கு - வரம்பின் பக்கம். இனிமேல் எம்மை இங்குப் படையான்; படையான் - பிறப்பியான். பூதங்கள் என்னும் செம்மையாகிய படைகளை உடையவன்; படை - சேனை. (ருரு)

56. விஞ்சு கயலினங்கண் மேன்மை பெறுகுளத்துக்
கஞ்சங் குதிக்குங் கழுக்குன்றே—தஞ்சமென
மாவி னடிப்பான் மருவினு னன்பருளப்
பூவி னடிப்பான் புரம்

(கு - பு.) கயல் இனங்கள் கஞ்சத்தில் குதிக்கும்; கஞ்சம் - தாமரை. குளத்து - குளத்தில். கம் சங்கு உதிக்கும்; கம் - வெண்மையான. இத்தலத்திலுள்ள தீர்த்தங்களுள் ஒன்ருகிய சங்க தீர்த்தத்தில் கஉ - வருடத்திற்கு ஒருமுறை சங்கம் தோன்றுமென்பது புராண வரலாறு; இது பிரத்தியட்சத்திலும் காணப்படுகின்றது. தஞ்சமென - தமக்குப் பற்றுக்கோடென்று அடியார் சொல்லும் வண்ணம். மாவின் அடிப்பால் மருவினன் - மாமரத்தின் அடியில் பொருந்தியிருந்தான்; மாவென்றது காஞ்சியிலுள்ள மாமரத்தை. அன்பர்களது உள்ளப் பூவில் நடிப்பான். (ருசு)

57. சேரும் பிதிர்கருமஞ் செய்பவருங் கான்மயிலும்
காரை விழையுங் கழுக்குன்றே—நேரெதிர்ந்து
வீரிடத்தா னத்தந்தி மெய்யுரித்தோன் சூழவரும்
பாரிடத்தா னத்தன் பதி.

(கு - பு.) பிதிர் கருமம் செய்பவர் காரையை விழையும்; காரை - ஒருவகைச் செடி; இது பிதிர் கருமங்களுக்கு உரியது. மயில் காரை விழையும்; காரை - மேகத்தை. தானம் தந்தி வீரிட - மதத்தைப் பொழியும் யானை வீரிடும்படி. அதன்மெய்யை உரித்தோன். பாரிடத்தான் - பூதகணங்களுக்குத் தலைவன். அத்தன் - தலைவன். (ருஎ)

58. நல்லார் குடைதடத்து நாடு மருவியிலும்
கல்லார மேவுங் கழுக்குன்றே—சொல்லூரும்
மாமகத்து வந்தான் மலியுமம்பர்த் தொண்டர்செயும்
தீமகத்து வந்தான் சிலம்பு.

(கு - பு.) குடை - நீராடுகின்ற. தடத்தில் கல்லாரம் மேவும் - தடாகத்தில் செங்கழுநீர்மலர்கள் பொருந்தும். அருவியில் கற்களும் ஆரமும் மேவும்; கல் - மாணிக்கம்; ஆரம் - முத்து. மா மகத்துவம் மலியும்; தான்: அசை. அம்பர்த் தொண்டர் - சோமாசி மாற நாயனர்; அம்பர் - திருவம்பரென்னும் தலம். மகத்து வந்தான்; மகம் - யாகம். (ருஅ)

59. மாதர் மலர்விழியும் வாசிப்போர் தம்மனமும்
காதக மோடுங் கழுக்குன்றே—போதமிகும்
சேரமா னத்தன் சிலம்பிலுலாப் பாடமகிழ்
வீரமா னத்தன் விருப்பு.

(கு - பு.) விழி காது அகம் ஓடும் - கண்கள் காதினிடம் ஓடுகின்ற. வாசிப்போர் தம் மனம் : காதகம் ஓடும் - பிடித்தலே நீங்குகின்ற. போதம் - அறிவு. சேரமான் - கழறிற்றறிவார் நாயனர். அ தன் சிலம்பில் - அழகிய தன் கைலாய வெற்பில். உலா - ஆதி உலாவை. வீரமான் அத்தன் - வீரமானைத் தாங்கிய திருக்கரத்தை உடையவன்; துர்க்கையின் தலைவனென்றலுமாம். (ருகூ)

60. பொற்பின்மட வாருக்கும் பூதியணி வோருக்கும்
கற்பங் கழியாக் கழுக்குன்றே—அற்பொழுதில்
ஆடினு னந்தி யழலனையா னுகமங்கள்
பாடினு னந்தி பதி.

(கு - பு.) மடவாருக்குக் கற்பு அங்கு அழியாத. பூதி - விபூதியை. கற்பம் - விபூதிவகையில் ஒன்று. அற்பொழுதில்-இராத்திரியில். அந்தியையும் அழலையும் அனையான். நந்தி : சிவபெருமான் திருநாமம்; "பேர்நந்தியென்றேத்தும், அருவரைசூழையாறர்க்கு", "நந்தியை நங்கள் பிரான்றனை நானடி போற்றுவதே", "நந்தி நாம நமச்சி வாயவே" (தேவாரம்.) (சுo)

61. பஞ்சினடி யார்கவுளும் பாடு மறையோரும்
கஞ்சனையொப் பாகுங் கழுக்குன்றே—தஞ்சமென
ஏனதி நாதர்தா மேத்த வருள்சுரந்த
வானதி நாதர் மனை.

(கு - பு.) பஞ்சின் அடியாருடைய கவுள் கஞ்சனை ஒப்பாகும்; பஞ்சின் அடியார் - மகளிர்; பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு; கவுள் - கன்னங் கள்; கஞ்சனை - கண்ணுடி. மறையோர் கஞ்சனை ஒப்பாகும்; கஞ்சனை - பிரமனை. ஏனதி நாதர் - ஏனதிநாத நாயனர். வான் ஆதி நாதர் - ஆகா யத்திற் பிறந்த ஆதியாகிய நாத தத்துவமாக உள்ளவர்; ஆகாய முதலிய பூதங்களுக்கு நாதர் என்றலுமாம். (சுக)

62. உட்டுறவோர் மாத ரொளிர்பூ ணகில்வினைவார்க்
கட்டங் கடக்குங் கழுக்குன்றே—இட்ட
மருவக் கரையான் வருமூவர் பாடும்
திருவக் கரையான் சிலம்பு.

(கு - பு.) உள் துறவோர் வினையினல் வந்த நீட்சியை உடைய கஷ்டங்களைக் கடக்கும். நகில்: வினை வார்க்கட்டை அங்கு அடக்கும் - தொழிலமைந்த கச்சினை அடக்கும்; வார் - கச்சு. இட்டம் மருவு - அன்பு பொருந்திய. அக்கு அரையான். வரும் மூவர் - தரிசிக்க வந்த சம்பந்தர் முதலிய மூவர். திருவக்கரை: ஒரு தலம். (சுஉ)

63. செந்திருவ ணர்கரமுஞ் சேரு மதகரியும்
கந்துக மல்குங் கழுக்குன்றே—சந்திரன்சேர்
சென்னிய ரல்லார் திருமிடற்ற ரன்பர்களுக்
கன்னிய ரல்லா ரகம்.

(கு - பு.) கரம் கந்துகம் அல்கும் - கைகளில் பந்துகள் தங்கப்பெறும். மதகரி கந்து உக மல்கும்; கந்து - கட்டுத்தறி. சென்னியர் - தலையை உடையவர். அல் ஆர் திரு மிடற்றர்; அல் - இருள். அன்பர்களுக்கு அன் னியர் அல்லார். (சுரு)

64. விரும்பு மணிப்புற்று மேவுமணப் பந்தர்
கரும்பணிக ளோங்குகழுக் குன்றே—அரும்பும்
சிலம்பொலி காட்டினர் சேரர்பிராற் குப்பேய்க்
குலம்பொலி காட்டினர் குன்று.

(கு - பு.) புற்றில் கரும் பணிகள் ஓங்கும்; பணிகள் - பாம்புகள். மணப்பந்தரில் கரும்பு அணிகள் ஓங்கும்; கரும்பு அணிகள் - கரும்புகளின் அலங்காரங்கள்; அணிகள் - வரிசைகளுமாம். சேரர்பிராற்குச் சிலம்பு ஒலியைக் காட்டினர்; சேரர்பிரான் - சேரமான் பெருமாள் நாயனர். பேய்க் குலம் பொலிகின்ற காட்டினர்; காடு - மயானம். (சுச)

65. தாரிலகு தோரணமுஞ் சைவருறை நன்மடமும்
காரண மல்குங் கழுக்குன்றே—பாரை
அருந்தேற்று வந்தா னமரிளசை மாறன்
விருந்தேற்று வந்தான் விருப்பு.

(கு - பு.) தோரணம் காரை அண்ண மல்கும்; கார் - மேகம். மடம் காரணம் மல்கும்; காரணம் - ஓர் ஆகமம்; இவ்வாகமம் இத்தலத்திற்குரியது. பாரை அருந்து ஏறு - பூமியை உண்ட இடபம்; என்றது திருமாலாகிய இடபத்தை. இளசை மாறன் - இளையான்குடி மாற நாயனுருடைய. விருந்தை ஏற்று உவந்தான். (சுரு)

66. பொன்னனையார் பூணகிலும் பூக மலிவயலும்
கன்னலணி வீறுங் கழுக்குன்றே—என்னைக்
கருவிற் கிடத்தார் கருதியபொன் னோங்கற்
செருவிற் கிடத்தார் சிலம்பு.

(கு - பு.) நகில்களில்: கல் நல் அணி வீறும் - மாணிக்கங்கள் பதித்த நல்ல ஆபரணங்கள் மிக்கிருக்கும். பூகம்-பாக்கு மரங்கள். கன்னல் அணி-கரும்புகளின் வரிசை. கருவில் கிடத்தார் - பிறவியில் கிடத்தாதவர். பொன் ஓங்கல் செரு வில்லுக்கு இடத்தார் - மேருவாகிய வில்லுக்கு ஏற்ற இடப் பக்கத்தை உடையவர்; பொன்ஓங்கல் - மேருமலை; செரு - போர். (சுசு)

67. மித்தையகல் வீரர்கையும் வீட்டிறப்பி னிற்புறவும்
கத்தி யுலவுங் கழுக்குன்றே—அத்தி
உரித்தா னமல மொழித்தான் பணிப்பூண்
பரித்தா னமலன் பதி.

(கு - பு.) மித்தை - பொய். வீரர் கை கத்தி உலவும். இறப்பில் - வீட்டிறப்பில். புறவு கத்தி உலவும் - புருக்கள் கத்திக்கொண்டு திரியும். அத்தி உரித்தான் - யானையை உரித்தவன். நம் அலத்தை ஒழித்தான்; அலம் - வருத்தம். பணிப்பூண் - சர்ப்பாபரணத்தை பரித்தான் - தாங்கினவன். (சுஎ)

68. சேந்த னடியர்குழாஞ் சேர்குறிகள் வைத்திளைஞர்
காநதம் படிக்குங் கழுக்குன்றே—ஏந்துகொன்றைத்
தேனமருங் கண்ணியார் தேவியொடு பார்த்தனெதிர்
கானமருங் கண்ணியார் காப்பு.

(கு - பு.) சேந்தன் - முருகக்கடவுளின். காந்தம் படிக்கும் - கந்த புராணத்தைப் பாராயணம் செய்யும். குறிகள் - இலக்குக்களை. இளைஞர் இலக்கு வைத்துக் காந்து அம்பு அடிக்கும்; காந்து அம்பு - கொதிக்கின்ற பாணம். தேன் அமரும் கண்ணியார்; கண்ணி - தலையிற் சூடும் மாலை. பார்த்தன் - அருச்சுனன். கானம் மருங்கு அண்ணியார்; கானம் - காடு; அண்ணியார் - அணுகியவர். (சுஅ)

69. நம்புகழைக் கூத்தர்களு நாடுமலை வாவியினும்
கம்பத் திவருங் கழுக்குன்றே—வம்பு
விரவிமதிக் கண்ணன்பு மேவேனை யாண்ட
இரவிமதிக் கண்ண னிடம்.

(கு - பு.) கழைக்கூத்தர் கம்பத்து இவரும். வாவியில்: கம் பத்தி - அலைகளின் வரிசை; கம் : அலைக்கு ஆகுபெயர். வம்பு விரவி - தீச்செயலைக் கலந்து. மதிக்கண் அன்பு மேவேனை; மதிக்கண் - புத்தியினிடத்தே; இம திக்கு அண் அன்பு மேவேனை - யமதிக்கை அணுகுதற்கு உரியவனும் அன்பு மேவேனுமாகிய அடியேனை யென்றலுமாம்; யமதிக்கு இமதிக்கெனவும் வழங்கும்; “வெற்றிமதிக் கண்ணியான் வியாம லாண்டவருள், வெற்றிமதிக் கண்ணியான் வீடு” (கலைசைச் சிலேடை வெண்பா, ௪.) இரவியும் மதியுமாகிய முகக் கண்களை உடையவன். (சுகூ)

70. சேலோடு தண்புனலுஞ் செம்பொற் கழலுமன்னர்
காலோ டிவருங் கழுக்குன்றே—பாலமம்பிற்
கட்டிக் களித்தான்றன் கண்வளர்பா லாழிபுலிக்
குட்டிக் களித்தான்றன் குன்று.

(கு - பு.) சேல் ஓடு - சேல் மீன்கள் ஓடுகின்ற. புனல் காலில் ஓடிவரும்; கால் - வாய்க்காலில். கழல் மன்னர் காலோடு இவரும்; கழல் - வீரக்கழல். அம்பில் பாலம் கட்டிக் களித்தான் தன்; அம்பு - கடல்; பாலமென்றது அணையை; களித்தான் - இராமன். புலிக்குட்டிக்குப் பால் ஆழி அளித்தான் - உபமன்யு முனிவருக்குப் பாற்கடலை உண்ணக் கொடுத்தவர்; புலி - வியாக்கிரபாதர். (எ0)

71. செம்பவள வாய்க்கிளியுஞ் செந்தா மரைக்கயமும்
கம்பு ளிருக்குங் கழுக்குன்றே—வெம்பிமனம்
யானைந்து மாடில் யமபுரிநண் ணுதாள்வோன்
ஆனைந்து மாடி யகம்.

(கு - பு.) கிளி கம்புள் இருக்கும்; கம்புள் - கம்பங்கொல்லையுள். கயம் கம்புள் இருக்கும் - குளத்தில் சம்பங்கோழி இருக்கும். கம்பு உள் இருக்கும் என்றலுமாம்; கம்பு - சங்கு. யான் வெம்பி மனம் நைந்து. மாடு இல் யமபுரி நண்ணுமல்; மாடு - செல்வம், பெருமை, பொன். ஆன் ஐந்தும் ஆடி; ஆன் ஐந்து - பஞ்ச கவ்வியம். (எக)

72. ஒப்பின்மன்னர் தங்கரமு மோதுமவர் வீடுமிலங்
கப்பண மன்னுங் கழுக்குன்றே—கப்பகலாச்
சூலத்த னத்தன் றொழற்கரியான் றீக்கணொளிர்
பாலத்த னத்தன் பதி.

(கு - பு.) மன்னர் தம் கரம் கப்பணம் மன்னும்; கப்பணம் - ஓர் ஆயுதம். வீடு இலங்கப் பணம் மன்னும்; பணம் - திரவியம். இலங்கப் பண்ண வீடுகள் மன்னும் என்றலுமாம்; இலங்கப்பண்ண - விளங்கும்படி அலங்கரிக்க. கப்பு அகலாத சூலத்தன்; கப்பு - கவர்ப்பு. நத்தன் - திருமால்; நத்து - சங்கு; தொழற்கு அரியான். தீக்கண் ஒளிர் பாலத்தன்; பாலத்தன் - நெற்றியை உடையவன். (எஉ)

73. செச்சை முலையார் செறிகரங் கைக்கரிகள்
கைச்சரி துன்னுங் கழுக்குன்றே—மெச்சவரு
சித்திர மானன் றிகழ்கீழ் முகத்தொடாறு
வத்திர மானன் மனை.

(கு - பு.) செச்சை - செஞ்சாந்தின் குழம்பு. கரம் கைச்சரி துன்னும் - கைகள் ஒருவகை வளையல்களைப் பொருந்தும். கைக்கரி - யானைகள். கைச்சு அரி துன்னும் - வெறுத்துச் சிங்கங்களைப் போர்செய்தற்கு அடையும். சித்திரம் மானன் - அழகிய மானை ஏந்தியவன். கீழ்முகத்தோடு அறு வத்திர மானன் - கீழ்நோக்கிய அதோமுகத்துடனே இயல்பாயுள்ள ஐந்து முகமும் சேர ஆறுமுகங்களை உடையவன் ஆனன்; வத்திரம் - முகம் (கந்த. திருவவதார. 43 - 4); "ஐந்து முகத்தோ டதோமுகமாய்" (கந்தர்கலி. 76.) (எ௩)

74. வாட்டமிலன் பர்க்குமுத்தி மாக்கள் பிடிக்குவயற்
காட்டிக் களிக்குங் கழுக்குன்றே—நாட்டமுறும்
யோகத்தா ரத்த ருவகை பெருகுமிடப்
பாகத்தா ரத்தர் பதி.

(கு - பு.) அன்பர்க்கு முத்தியைக் காட்டிக் களிக்கும். பிடிக்கு மாக்கள் வயற்காட்டு இக்கு அளிக்கும்; பிடி - பெண்யானை; வயலை வயற்காடென்பது வழக்கு. இக்கு - கரும்பை. யோகத்தாருடைய அத்தர்; அத்தர் - தலைவர். இடப்பாகம் தாரத்தர் - இடப்பாகத்திலே உமாதேவியாரை உடையவர்; தாரம் - மனைவி. (எச)

75. யாணர்மிகு மாவணமு மின்புதவு வீதியுஞ்சீர்
காணம் பலமன் கழுக்குன்றே—பேணரிய
மேனி சிவந்தார் விடுதூது முன்பரவை
பானி சிவந்தார் பதி.

(கு - பு.) யாணர் - புதுவருவாய். ஆவணம் காணம் பல மன் - கடைவீதிகள் பல்பொன்னைப் பொருந்தும். இன்பு உதவு வீதி சீரைக் காண்கின்ற அம்பலம் மன்; அம்பலம் - சபை; கோயிலுமாம். சிவந்த மேனியார். விடு தூது முன் பரவைபால் நிசியில் வந்தார்; நிசி - இராத்திரி. (எரு)

76. புவிகொள் பலாச்சுளைகள் பொங்கறவோர் கைகள்
கவிகைமரு வுங்கழுக் குன்றே—பவமார்
எமையா ளிடத்தன்பு ளெய்த வருளும்
உமையா ளிடத்த னுவப்பு.

(கு - பு.) பலாச்சுளைகள் கவிகளின் கையில் மன்னும்; கவி - குரங்கு. அறவோர் கைகள் கவிகை மன்னும்; கவிகை - கொடுக்கக் கவிதல்; கொடை. அறவோர் முனிவரெனக் கொண்டு குடை மன்னுமெனவுமாம். பவம் - பிறவி; பாவமும் ஆம். எமை ஆளுமிடத்தில் அன்பு உள் எய்த அருளும்; இடம் - செவ்வி. உமாதேவியார் தங்கிய இடத்தன். (எசு)

77. வானூர் மலைச்சரியு மாறு வயலுநீர்க்
கானாறு மேவுங் கழுக்குன்றே—மேனாளிற்
கிட்டருந்த வந்தான் கிடைத்தவந்தி தானிட்ட
பிட்டருந்த வந்தான்றன் பெட்பு.

(கு - பு.) மலைச்சரி கான் ஆறு மேவும்; மலைச்சரி - மலைச்சாரல்; கான் ஆறு - காட்டாறு. வயல் நீர்க்கால்களையும் நாறுகளையும் மேவும்; நாறு - நாற்றுக்கள். கிட்ட அரு தவம் தான் கிடைக்கப்பெற்ற வந்தி; தான் : அசை; வந்தி - செம்மனச் செல்வியென்னும் பிட்டுவாணிச்சி. பிட்டு அருந்துதற்கு வந்தான். (எஎ)

78. தான மிருகரியுந் தண்மூ லிகையுமராக்
கானஞ் சரிக்குங் கழுக்குன்றே—ஈனம்
அறுத்த வரையா னமலன்விடக் கச்சுப்
பொறுத்த வரையான் புரம்.

(கு - பு.) தானம் மிகு கரி மராக் கானத்தில் சரிக்கும்; தானம் - மதம்; மரா - கடம்பு. அரா கால்கின்ற நஞ்சை மூலிகை அரிக்கும்; அரா - பாம்பு; அரிக்கும் - நீக்கும். ஈனம் அறுத்தவர் ஐயான்; ஐயான் - தலைவன். விடக்கச்சு-விடத்தை உடைய பாம்பாகிய கச்சினை; அரையான் - இடையை உடையவன். (எஅ)

79. மன்னுபுகழ் வள்ளல்களு மாதரார் வாய்மொழியுங்
கன்ன னிகராங் கழுக்குன்றே—முன்னிகலிச்
சொற்கூ விளத்தான் றுருவரியுங் காணவொணு
நற்கூ விளத்தா னகம்.

(கு - பு.) வள்ளல்கள் கன்னனை நிகர் ஆம்; கன்னன் - கர்ணன். மாதரார் வாய்மொழி கன்னலை நிகர் ஆம்; கன்னல்-கரும்பை; சர்க்கரையை. முன் இகலி - முற்காலத்திற் பகைமை கொண்டு, கூ விள்ளும்படி தான் துருவும் அரியும்; கூ - பூமி; துருவு - தேடிய; அரியும்-திருமாலும். கூ விள்ளத்தான் துருவரி யென்பது, "காப்பிட்ட பிள்ளைக் கறிக்காசைப் பட்டுவை கைக்கரைமேல், மாப்பிட் டுவந்த மதுரேச னேமலை யானநின்னைக், கூப்பிட்டு நின்று குனிந்தொரு கோலக்கொம் பாற்றடவிப், பூப்பட்ட கண்ணிச் சயமாக்கி ஞன்மைப் புயல்வண்ணனே" என்னும் பாடலை நினைப்பிக்கின்றது. கூவிளம் - வில்வம். நகம் - மலை. (எகூ)

80. திக்கயநே ருங்கரியுஞ் செல்வர்மனை யுஞ்சுவர்க்கம்
கைக்கவள மன்னுங் கழுக்குன்றே—மெய்க்கும்
சமையத் தலைவரையான் சம்புவெள்ளி யென்ன
அமையத் தலைவரையா ளூர்வு.

(கு - பு.) திக்கயம் - திசையானைகளை. சு வர்க்கம் - நல்ல கூட்டம். கவளம் - யானையின் உணவு. செல்வர்மனை சுவர்க்கம் கைக்கும்படி வளம் மன்னும். சமையம் தலைவர் ஐயான் - சம்பந்தமூர்த்திநாயனர் முதலிய சமய குரவர்களுக்குத் தலைவன். வெள்ளி என்ன அமைந்த அந்தத் தலை வரையான்; தலை - தலைமை. வெள்ளிவரை - கயிலையங்கிரி. (அ0)

81. புனலுண் முகிலும் பொழில்சேர் கனியும்
கனருசி மேவுகழுக் குன்றே—அனக்குழிமுன்

குண்டோ தரற்குக் கொடுத்தபிரா னல்வேதம்
பண்டோ தரற்குப் பதி.

(கு - பு.) கனருசி - மின்னலை, மிக்க சுவையை. பண்டு நால்வேதம் ஓதும் அரனுக்கு. (அக)

82. நற்குலத்து வந்தோரு நாடுமணி வீதிகளும்
கற்றளி யோவாக் கழுக்குன்றே—பொற்கழன்மேற்
கோவை யிடத்தான் குளிர்துளவற் காழிதந்தோன்
பாவை யிடத்தான் பதி.

(கு - பு.) நல் குலத்து வந்தோர் கற்று அளி ஓவா; அளி - கருணையை. கற்றளி - கல்லாற் செய்யப்பட்ட ஆலயங்கள். கோவை இட - கண்ணை இடுதலால். துளவற்கு - திருமாலுக்கு, ஆழி - சக்கராயுதத்தை. (அஉ)

83. சிட்டர்தொழு மாலயமுஞ் செய்ய மலர்ப்பொழிலும்
கட்டளை மாறாக் கழுக்குன்றே—கிட்டித்
திருப்பதத் தானற் றிகழ்மதியைத் தேய்த்த
பருப்பதத் தானற் பதி.

(கு - பு.) ஆலயம் கட்டளை மாறா; கட்டளை - நிவந்தங்கள் (ஏற்பாடுகள்.) மலர் பொழிலும் கள் தளை மாறா; தளை - கட்டு. 'மலர்பொழியும் கட்டளை மாறா' எனவும் பாடம்; இதற்கு மலர்கள் சொரியும் தேன்கள் வயல்களில் மாறாத என்பது பொருள். திரு பதத்தான் அல் திகழ் மதியைத் தேய்த்த; ஆன்: மூன்றாம் வேற்றுமை உருபு; அல் - இரவில். பருப்பதம் - ஸ்ரீ சைலம் என்னும் தலம். (அங)

84. பொன்றாழ் மனையகமும் புண்ணியரும் பாசவினை
கன்றா தரிக்குங் கழுக்குன்றே—துன்றுமன்பிற்
றாழ வுரியார் தமக்கருள்வார் வந்தெதிர்த்த
வேழ வுரியார் விருப்பு.

(கு - பு.) மனையகம் கன்று ஆ தரிக்கும்; கன்றா - கன்றுகளும் பசுக்களும்; கன்றுகளை ஆதரிக்கும் எனலுமாம். புண்ணியர் பாசவினை கன்றாது அரிக்கும்; கன்றுதல், பாசத்தின் தொழில்; அரிக்கும் - கெடுக்கும். தாழ - வணங்குதற்கு. வேழ உரியார் - யானைத்தோலினர். (அச)

85. துன்னுமணஞ் செய்விப்போர் சூழா லயஞ்சமைப்போர்
கன்னிதா னஞ்செய் கழுக்குன்றே—மன்னுசைவம்
நன்கூ ரகத்தன்பர் நாளு மறவாத
புன்கூ ரகத்தன் பொருப்பு.

(கு - பு.) மணம் செய்விப்போர் கன்னிதானம் செய்; கன்னிதானம் - கன்னிகாதானத்தை. ஆலயம் சமைப்போர் கல் நிதானம் செய்; நிதானம் - சமம். சைவம் நன்கு ஊர் அகத்து அன்பர்; அகம் - மனம். புன்கூர் - திருப்புன்கூரென்னும் தலம். அகம் - இடம். (அரு)

86. சாலச் சிவகதையாற் சைவர்நமன் கோளையரன்
காலங் கழிக்குங் கழுக்குன்றே—மாலெனுமோர்
அஞ்சரத்தின் றோலா ரணிமுப் புரமெரித்தோர்
குஞ்சரத்தின் றோலார் குடி.

(கு - பு.) சைவர் சிவகதையால் காலம் கழிக்கும். நமனுடைய கோளை அரன் கால் அங்கு அழிக்கும்; கோள் - கொள்கையை. மால் என்னும் ஓர் அம் சரத்தினால் தோலார் அணி முப்புரம் எரித்தோர்; சரத்தின் - அம்பால்; தோலார் - ஏனையோரிடத்துத் தோல்வியில்லாதாராகிய அசுரர்களுடைய; "கயவர் புரமோ ரம்பாற் செற்றவன்" (தே. திருநா.) குஞ்சரத்தின்றோல் - யானைத்தோல். (அசு)

87. பரந்திழியு மஞ்சனத்துப் பண்வீணை மாதர்
கரந்தைவரு நற்கழுக் குன்றே—புரந்தீ
இடப்பூவை யத்தன் றிவர்ந்தோ னுமையாம்
மடப்பூவை யத்தன் மனை.

(கு - பு.) திருமஞ்சனத்திற் கரந்தை வரும்; கரந்தை - சிவகரந்தை. மாதர் கரம் பண் வீணையைத் தைவரும்; கரம் - கைகள்; தைவரும் - தடவும். பூ வையத்து - பூமியாகிய தேரில்; வையம்-தேர். அன்று இவர்ந்தோன். உமையாம் மடம் பூவை அத்தன்; மடம் - இளமை; அத்தம்-பாதி. (அஎ)

88. செப்புமன்னர் முற்றத்துத் தேற்றார் மலர்ச்சோலைக்
கப்பந் தருவார் கழுக்குன்றே—செப்பரிய
மானப் பணிவான் மதிவெண் டலையோடு
வானப் பணிவான் மனை.

(கு -பு.) தேற்றார் கப்பம் தரும்; தேற்றார் - பகைவர். கப்பம் - திறை. 'சோலை கப்பு அம் தரு ஆர் - சோலையில் கிளைகளை உடைய அழகிய மரங்

கள் பொருந்தும். மானம் பணி - மானத்தை யுடைய பாம்பு. வால் மதி - வெண்மையான சந்திரன். வான் அப்பு - ஆகாய கங்கை. (அஅ)

89. சொற்பெரிய பாந்தள் சொரிகால மாரிமின்னூர்
கற்புழை வீறுங் கழுக்குன்றே—விற்கதிர்கள்
விண்பாவி னன்பல் விழவடித்தா ரையடிகள்
வெண்பாவி னன்பர் விருப்பு.

(கு - பு.) பாந்தள் கல் புழை வீறும்; பாந்தள் - பாம்பு; கல் புழை - கல்வெடிப்பு; குகை. காலமாரி மின்னூர் கற்பு உழை வீறும்; கற்பு உழை - கற்பினல்; உருபு மயக்கம். வில் கதிர்கள் விண் பாவு இனன் பல் விழ அடித்தார்; கதிர்கள் - கிரணங்கள்; இனன் - சூரியனது. ஐயடிகள் - ஐயடிகள் காடவர்கோன் நாயனூர். வெண்பா என்பது அவரருளிச்செய்த க்ஷேத்திரத் திருவெண்பாவை. (அகூ)

முப்பொருட் சிலேடை

90. புரிவரும்யோ கத்தார் புரவலர்க ளந்ந
கரிமா விழைகழுக் குன்றே—எரிபாம்பார்
கையா னரையானூன் காமுகனென் றென்றொண்டு
கையா னரையானூன் காப்பு.

(கு - பு.) யோகத்தார் கரிமா இழை; கரிமா - எண்வகைச் சித்திகளுள் ஒன்று. புரவலர்கள் கரியையும் மாவையும் இழைக்கும்; மா - குதிரை; இழைக்கும் - வளம்படச் செய்யும்; இழை கழுக்குன்று: வினைத்தொகை. அந் நகரி - அந்த நகரம்; மா விழை - திருமகள் விரும்பும். எரி ஆர்ந்த கையான்; பாம்பார்ந்த அரையான்; நிரனிறை. நான் காமுகன் என்று என் தொண்டைக் கையான்; கையான் - வெறுன். நரை ஆனுன் - வெண்மையான இடபத்தை உடையவன்; ஆன் - இடபம். (கூ0)

91. வளத்தில் லறத்தோர் மதனன் கரிநி
களத்திர மன்னுகழுக் குன்றே—அளக்கரும்விண்
மண்டெரி யானூன் வளர்கொடியோ னெற்றியிற்கண்
மண்டெரி யானூன் மனை.

(கு - பு.) வளத்து இல்லறத்தோர் களத்திரம் மன்னும்; களத்திரம் - மனைவி. மதனன் கள் அத்திரம் மன்னும்; கள் அத்திரம் - மலர்ப்பாணம். கரி நிகளம் திரம் மன்னும்; நிகளம் - இங்கே யானையின் பின்னங்காற்சங்கிலி; கால்தளை; திரம் - ஸ்திரமாக. விண்மண் தெரியான். ஆன் வளர் கொடியோன். நெற்றியில் கண் மண்டு எரி ஆனுன்; ஆனுன் - நீங்காதவன். (கூக)

92. மருவுபொழின் மாதர்விழி வாசத் தடநி
கருவரி காட்டுகழுக் குன்றே—வருநரியாம்
மாப்பினு கத்தான் வரமுன் பரிமேற்செல்
மாப்பினு கத்தான் வரை.

(கு - பு.) பொழில் கருவரி காட்டும்; கருவரி-கரிய வண்டுகளை. மாதர் விழி கருமையான அரியைக் காட்டும்; அரி - இரேகை. தடம் நிகர் உவரி காட்டும் - குளம் தனக்கு ஒப்புப் பொருளாக உள்ள கடலைத் தான் காட்டும்; குளம் கடல் போன்றதென்பது கருத்து. நரி ஆம் மா பின் ஆக வர - நரியாகிய குதிரைகள் பின்னேவர; தான்: அசை. பரிமேல் செல் மா பினுகத்தான்; பரி - வேதக் குதிரை; பினுகம் - சிவபெருமானது வில். (கூஉ)

93. அனமருவு வாவி யணிவீதி சான்றோர்
கனவிரத மேவுகழுக் குன்றே—புனையும்
விதிதலைக் கையான் விரும்பார் பிறவி
பொதிதலைக் கையான் புரம்.

(கு - பு.) வாவி கனவிரதத்தை மேவும்; கனவிரதம் - நீர். வீதி கன இரதம் மேவும்; கன இரதம் - பொன்னுலாகிய தேர்; கனம் - பொன். சான்றோர் கனவிரதம் மேவும்; கன விரதம் - பெரிய விரதம். விதியின் தலையை ஏந்திய கையான்; விதி - பிரமன். விரும்பார் பிறவி பொதிதலைக் கையான் - அன்பில்லாதவர் பிறவியை நீக்காதவன். (கூஙு)

94. விரவுபொழி லன்னமிடு மெல்லிய ரீவோர்
கரவீர மன்னுகழுக் குன்றே—விரவிவரு
மாலா நடத்தினன் வாதுசெயுங் காளிக்குத்
தோலா நடத்தினன் சூழ்வு.

(கு - பு.) பொழில் கரவீரம் மன்னும்; கரவீரம் - அலரி. அன்னம் இடும் மெல்லியர் கர ஈரம்; கர ஈரம் - கையீரம். ஈவோர் கரவு ஈர; கரவு ஈர - ஒளித்தல் அகல. மால் ஆ நடத்தினன் - திருமாலாகிய இடபத்தைச் செலுத்தியவன்; ஆ - இடபம். காளிக்குத் தோலாத நடத்தை உடையவன்; நடம் - நடனம். (கூச)

95. விரும்புமலர் வெண்முத்தம் வேந்தர் சமரிற்
கரும்புண் மலிகழுக் குன்றே—அரும்புதன
மாவடுவ ருந்துவார் வானீர் முடியரன்பர்
மாவடுவ ருந்துவார் வாழ்வு.

(கு - பு.) மலர் கரும்புள் மலி; கரும்புள் - வண்டு. வெண் முத்தம் கரும்பு உள் மலி; முத்துப் பிறக்கும் இடங்களில் கரும்பு ஒன்று. வேந்தர் சமரிற் கரும்புண் மலி; கரும்புண் - பெரியபுண். அரும்பு தனம் மா வடுவர் - அரும்பிய கொங்கைகளாலாகிய பெரிய வடுவை உடையவர். இது கச்சியில் நிகழ்ந்த செய்தி. உந்து வார் வான் நீர் - கங்கை. அன்பர் மா வடுவை அருந்துவார்; அன்பரென்றது அரிவாட்டாய நாயனாரை. (கூரு)

நாற்பொருட் சிலேடை

96. விளங்கு மதிபூ விடப்பாம் பரனார்
களங்க முறுகழுக் குன்றே—துளங்கலிலாக்
கல்லா லடிப்பிரியான் காணக் கதிதந்த
கல்லா லடிப்பிரியான் காப்பு.

(கு - பு.) மதி களங்கம் உறு. பூ கள் அம் கம் உறு - மலர் கள்ளாகிய அழகிய நீரை மருவிய. விடப் பாம்பு கள்ளத்தையும் கம்மையும் உறும்; கம் - காற்று. அரனார் களம் கம் உறும் - சிவபெருமான் திருக்கழுத்து மேகத்தை ஒக்கும். கல்லால் அடிப்பு இரியான்; கல்லால் அடித்தவர் சாக்கிய நாயனார். கல்லால்மரத்தின் அடியைப் பிரியான். (கூசு)

97. பெட்கும் பொழின்மாடம் பேதையர்க ணாட்டமிடை
கட்கந்தந் துன்னுங் கழுக்குன்றே—நட்புறுகோ
பாலன் றுதித்தார் பசிய நறுவேயின்
பாலன் றுதித்தார் பதி.

(கு - பு.) பெட்கும் - விரும்பப்படும். பொழில் கள்ளின் கந்தத்தைத் துன்னும்; கந்தம் - மணம். மாடம் கட்கு அந்தம் துன்னும் - மாடங்கள் கண்களுக்கு அழகு பொருந்தும். நாட்டம் கட்கம் தந்து உன்னும் - கண் கட்கவடிவத்தைக் காட்டிப் பிறரால் நினைக்கப்படும்; கட்கம் - வாள். இடைகட்கு அம் தந்து உன்னும்; தந்து - நூல். கோபாலனால் துதிக்கப் பட்டார்; கோபாலன் - கண்ணபிரான். வேயின்பால் அன்று உதித்தார்; மூங்கிலின்பால் உதித்தது திருநெல்வேலியிலும் திருப்பாசூரிலும். (கஎ)

98 சிங்கார மார்குவடு சிற்பரனார் தோள்கைகண்டம்
கங்காள மன்னுங் கழுக்குன்றே—சிங்கியுண
நாகைக்கா ரோணத்தார் நான்முகத்தார் நாடருஞ்சீர்
நாகைக்கா ரோணத்தார் நாடு.

(கு. - பு.) குவடு கங்கு ஆள மன்னும்; கங்கு - கழுகு. சிற்பரனார் தோள் கங்காளம் மன்னும்; கங்காளம் - முழு எலும்பு. சிற்பரனார் கை கம்

மையும் காளத்தையும் மன்னும்; கம் - பிரமன்தலை; காளம் - சூலம். சிற்பரனர் கண்டம் கம் காளம் மன்னும்; கம் காளம் - நீரில் தோன்றியவிடம். சிங்கி - விடத்தை. நா கைக்கார் - நா வெறுப்பு அடையார். ஓணத்தாரும் நான்முகத்தாரும்; ஓணத்தார் - திருமால்; ஓணம் - திருவோணம். நாகைக் காரோணம் - திருநாகைக் காரோணமென்னும் தலம். (கூஅ)

99. தொண்டர்மடங் கோகனகஞ் சூழ்கயஞ்சேல்வெற்புமின்னர்
கண்டனந் துன்னுங் கழுக்குன்றே—எண்டருமா
கம்பத் தடியானன் கார்ணவருள் கச்சியே
கம்பத் தடியானன் காப்பு.

(கு - பு.) தொண்டர் மடம் கண்டு அனம் துன்னும்; கண்டு அனம் - கற்கண்டும் உண்ணும் அன்னமும். கோகனகத்தைக் கண்டு அன்னம் துன்னும்; கோகனகம் - தாமரை; அன்னம் - அன்னப்பறவை. கயம் கண்டல் நந்து உன்னும்; கண்டல் - தாழையை; நந்து - சங்குகளை; உன்னும் - அடைய நினைக்கும். சேலும் வெற்பும் முறையே மின்னருடைய கண்ணையும் தனத்தையும் ஒக்கும். ஆகம் பத்து அடியான் ஆன் - பத்துச் சரீரங்கள் படைத்த திருமாலாகிய அடியவனும், நந்தி தேவரும். கச்சி ஏகம்பத்து அடி ஆனன்; ஏகம்பம் - ஏகாம்பரம்; ஒற்றைமாமரம்; அடியானன் - அடியை நீங்காதவன். (கூகூ)

100. சந்தக் கடம்பாவி சார்சேவ கம்வீதி
கந்தரங்க மாருக் கழுக்குன்றே—மைந்தனஞ்
ஞானத் தினிப்பார் நணுகா தருள்பாணர்
கானத் தினிப்பார் களிப்பு.

(கு - பு.) சந்தக் கடம்பு கந்தர் அங்கம் மாருத; கந்தர் - முருகக் கடவுள். ஆவி கம் தரங்கம் மாரு; ஆவி - குளம்; கம் தரங்கம் - நீரினலை. சேவகம் கந்து அரங்க மாரு - யானைகள் தூங்கும் இடம் கட்டுத்தறிகள் அழிந்து விழும்படி மாருத; கட்டுத்தறி வலியதென்றபடி. வீதி கந்து அரங்கம் மாரு; வீதி தூண்களை உடைய சபைகள் மாருத. மைந்தன் - மைந்தனாகிய அடியேன். அஞ்ஞானத்தால் இனி பார் நணுகாது. பாணர் கானத்து இனிப்பார்; பாணர் - திருநீலகண்டயாழ்ப்பாண நாயனர். (க00)

AIYAR LIBRARY ADYAR MADRAS

உ

திருக்கழுக்குன்ற மாலை

(கட்டளைக் கலித்துறை)

1. மீனவ னார்க்கன்று சம்புக் குலங்களை வீதியுள்ளே
சோனக னாகத் துரத்தும் பிராற்கிடஞ் சூன்முதிர்ந்த
ஈனவ னாக மிரைகண் டுமிழ்ந்த வியன்மணியைக்
கானக மாதர் கனலென்று மூட்டுங் கழுக்குன்றமே.

2. ஓரா யிரமறை யோங்குயி ராக வுடன்மலையாய்
நேரான சோதிக் கொழுந்தாம் பிராற்கிட நீண்டெழுந்து
பேராழி செய்யுந் தவத்தா லிடியெனும் பிள்ளைவந்து
காராழி நீர்கொண்டு பூசித்து மேவுங் கழுக்குன்றமே.

3. மல்லுஞ் சகடு மெருதுங் களிறு மருதுமன்று
வெல்லுங் கணைதொடு மேருவில் லாற்கிட மெய்யன்பினால்
அல்லும் பகலுநின் றஞ்செழுத் தோது மவர்களைப்போற்
கல்லு மருவியுங் கண்ணீர் சொரியுங் கழுக்குன்றமே.

4. குருவாரு மெய்யி லுருத்திரர் கோடி குலாவிவந்து
மருவா ரருச்சனை செய்யநின் றார்க்கிட மந்திநின்று
செருவா லெறிமணிப் பச்சைக் கதிரைச் செழும்புலென்று
கருவா ருழைக்குல நாவால் வளைக்குங் கழுக்குன்றமே.

இப் பதிப்பாசிரியர் குறிப்புரை முதலியவற்றுடன் பதிப்பித்துள்ள
வேறு பிரபந்தங்கள்

	ரூ.	அ.
தக்கயாகப்பரணி: பழைய உரை	4	0
பாசவதைப்பரணி	0	12
திருக்காளத்தி நாதருலா	0	5
திருப்பூவண நாதருலா	0	5
தேவையுலா (இராமேசுவர உலா)	0	4
மதுரைச் சொக்கநாதருலா	0	6
கடம்பர் கோயிலுலா	0	6
சங்கரலிங்க உலா	0	6
திரு இலஞ்சி முருகனுலா	0	5
திருக்கழுக்குன்றத்துலா	0	8
மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடுதூது	0	5
கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது	0	8
பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது	0	4
மான்விடுதூது	0	6
அழகர் கிள்ளைவிடுதூது	0	8
திருமயிலைத் திரிபந்தாதி	0	5
திருமயிலை யமகவந்தாதி	0	6
வலிவல மும்மணிக்கோவை	0	5
மதுரைச் சொக்கநாதர் மும்மணிக் கோவை	0	5
கலைசைக் கோவை	0	12
பழமலைக் கோவை	0	10
திருவாவடுதுறைக் கோவை	0	10
சிராமலைக் கோவை	0	12
திருவாரூர்க் கோவை	1	4
கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் (கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்)	2	8
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு மூலம் மட்டும்	5	10
சிவசிவ வெண்பா	0	8
திருமலையாண்டவர் குறவஞ்சி	0	6
திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை	0	2
மகரநெடுங்குழைக்காதர் பாமாலை	0	4

புராணங்கள்

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (2-ம் பதிப்பு 1927)	2	8
மண்ணிப்படிக்கரைப் புராணம்	0	8
திருவாரூர்த் தியாகராச லீலை	0	12
ஆற்றூர்ப் புராணம்	0	10
விளத்தொட்டிப் புராணம்	0	6
தணிகாசல புராணம்	0	10

கிடைக்குமிடம் :— "தியாகராஜ விலாசம்"

பிள்ளையார் கோயில் தெரு,

திருவேட்டீசுவரன்பேட்டை, சென்னை.